# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விழி : 01 ஏப்ரல் 2005 பார்வை : 08 விலை : ரூபா.25.00



உள்ளே....

வி. தற்பரன் ■ ஆசிரியர் கல்வி : எதிர்காலம் நோக்கி...

சி. சரவணபவானந்தன் ■ ஆசிரியர்களின் கற்கும் கற்பிக்கும் சுதந்திரம்

தை. தனராஜ் ■ தீர்மானம் மேற்கொள்ளல்: விளைதிறன்மிக்க ஆசிரியருக்கான அடிப்படைத் தேர்ச்சி

க. பாஸ்கரன் ■ எண்ணக்கரு வரைபடம் : வினைத்திறனான கணிப்பீட்டுக் கருவி

முத்து இராதாகிருஷ்ணன் ■ கல்விச் சீர்திருத்தமும் சிறுவர் அரங்கும்

அகவிழி
மாத இதழ்
ஆசிரியர்:
தெ.மதுசூதனன்
ஆசிரியர் குழு :
சாந்தி சச்சிதானந்தம்
ச. பாஸ்கரன்
காசுபதி நடராஜா
நிர்வாக ஆசிரியர்:
மனோ இராஜசிங்கம்
ஆலோசகர் குழு :
பேரா.கா.சிவத்தம்பி
(தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேரா.சபா.ஜெயராசா
(கல்விப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
பேரா.சோ.சந்திரசேகரன்
தலைவர், கல்விப்பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ஹுசைன் இஸ்மாயில்
(துணைவேந்தர்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)
மா.சின்னத்தம்பி
(தலைவர், கல்விப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
கலாநிதி ப.கா.பக்கீர் ஜஃபார்
(கல்விப்பீடம்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)
கலாநிதி மா.கருணாநிதி
(கல்விப்பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)
மா.செல்வராஜா
(தலைவர், கல்விப்பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்)
தை.தனராஜ்
(பணிப்பாளர், தமிழ்த்துறை,
தேசிய கல்வி நிறுவகம்)
உ.நவரட்ணம்
(பணிப்பாளர்,
ஆசிரியவாண்மை அபிவிருத்தி
நிலையம், தேசிய கல்வி நிறுவகம்)
அச்சு :
ரெக்னோ பிரின்ட், கொழும்பு - 06
வெளியீடு மற்றும் தொடர்புகட்கு :
AHAVILI
49/1, Medawelikada Road, Rajagiriya.
Tel : 011-2869257
E-mail : ahaviliguru@yahoo.co.uk

இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவில் மீண்டும் (28-03-05 இரவு 10.10) பாரிய நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது 8.7 ரிக்டர் அளவு என பதியப்பட்டுள்ளது. இதனால் ஆசியாவின் கரையோரப் பகுதிகளில் சுனாமித்தாக்கம் ஏற்படும் சாத்தயக் கூறுகள் இருப்பதாக பசுபிக் சுனாமி எச்சரிக்கை நிலையம் அறிவித்திருந்தது. ஆனால் மோசமான விளைவுகள் அழிபாடுகள் ஏற்படவில்லை.

2004 டிசம்பர் 26 இல் ஏற்பட்ட பாரிய அழிபாடுகளுக்கு பிறகு இயற்கைப் பேரிடர் குறித்து நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பது தவிர்க்க முடியாது. மீண்டும் இது போன்ற சுனாமித் தாக்கம் ஏற்பட்டால் அதன் விளைவுகள் அழிபாடுகள் மிக மோசமாகவே இருக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

மக்களிடையே இயல்பு வாழ்க்கை திரும்புவதற்கான "திட்டமிடல்" "முகாமைத்துவம்" அரசு தரப்பிலிருந்து பொறுப்பாக வெளிப்படவில்லை. சுனாமியைச் சாதகமாகப் பயன்படுத்தி "அவசரகாலச் சட்டத்தை" அமுல்படுத்துவதில் அவரசத்தை அரசாங்கம் வெளிப்படுத்தியதை நாம் இந்த இடத்தில் நினைவுபடுத்த வேண்டும்.

டிசம்பர் 26 சுனாமி பேரிடர் நிகழ்ந்து மூன்று மாதங்கள் முடிவடைந்துள்ள போதிலும் புனர்வாழ்வு, புனர் நிர்மாண, மீள் குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானம் எடுக்க முடியாத நிலைமை அரசாங்கத்தின் தரப்பில் நீடித்து வருவதாக பரவலான விமர்சங்கள் உண்டு. இதன் மூலம் அரசாங்கத்தின் இயலாமை, முதிர்ச்சியின்மை, மக்கள் நலன் யாவும் வெட்ட வெளிச்சமானது. இயற்கைப் பேரிடரை காரணமாகக் கொண்டு சமாதான முயற்சிகளைப் பின்னுக்குத் தள்ளும் "அபாயம்" சூழ்ந்து வருவதை எதார்த்தம் மேலும் மேலும் மெய்ப்பிக்கிறது.

ஆக நாம் தொடர்ந்தும் வரலாற்றிலிருந்து பாடம் படிக்கா விட்டால் நமக்கு கல்வியின் பயன் எதற்கு என்ற கேள்வி எழுவது கூட தவிர்க்க முடியாது. கல்வியின் உண்மையான அறிவுத் தேடல் நம்மை நாம் புரிந்து கொள்வதோடு இயற்கையையும் சமூகத்தையும் புரிந்து வாழ்வதற்கே. இயற்கையுடன் கூடிய வாழ்முறை சார்ந்த தெரிவு நமக்கு முக்கியம் அவசியம் என்பதையே வரலாறு மீண்டும் மீண்டும் நிரூபிக்கிறது.

❑

# ஆசிரியர் கல்வி : எதிர்காலம் நோக்கி...

## அறிமுகம்

ஆசிரியர்களின் வாண்மை விருத்தியின் அடிப்படை அம்சங்களில் முக்கியமானதாக ஆசிரியர் கல்வி அமைகிறது. ஆசிரியர்களின் கற்பித்தல் பணியின் வினைத்திறன், விளைதிறன் என்பவற்றில் அவர்களது கல்வி மிகப் பெரும் பங்கு வகிக்கிறது. ஆசிரியர் கல்வியின் தரத்தை உயர்த்தாது கற்பித்தலின் தரத்தை முன்னேற்றுவதும் மாணவர்களின் கற்றல் தரத்தை உறுதிப்படுத்துவதும் கடினமானது என நம்பப்படுகின்றது. முன்பு பிள்ளைகளின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு பாடசாலைகளின் உட்கட்டமைப்பையும் பௌதீக வசதிகளையும் முன்னேற்றுவது போதுமானது என்று நம்பப்பட்டது. ஆனால் அண்மைக் காலங்களில் ஆசிரியர் வகிபங்கின் முக்கியத்துவம் உணரப்பட்டதால் ஆசிரியர் கல்வியை தரமானதாக்குவது முக்கியமானது என்று ஆய்வாளர்கள் வற்புறுத்துகின்றனர். இந்தப் பின்னணியில் ஆசிரிய கல்வியின் நோக்கங்கள், செயற்பாடுகள், அவற்றின் வினைத்திறன் மற்றும் விளைதிறன் பற்றி இக் கட்டுரை ஆராய்கிறது.

ஆசிரியர்களின் வாண்மை விருத்தியின் அடிப்படை அம்சங்களில் முக்கியமானதாக ஆசிரியர் கல்வி அமைகிறது. ஆசிரியர்களின் கற்பித்தல் பணியின் வினைத்திறன், விளைதிறன் என்பவற்றில் அவர்களது கல்வி மிகப் பெரும் பங்கு வகிக்கிறது. ஆசிரியர் கல்வியின் தரத்தை உயர்த்தாது கற்பித்தலின் தரத்தை முன்னேற்றுவதும் மாணவர்களின் கற்றல் தரத்தை உறுதிப்படுத்துவதும் கடினமானது என நம்பப்படுகின்றது. முன்பு பிள்ளைகளின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு பாடசாலைகளின் உட்கட்டமைப்பையும் பௌதீக வசதிகளையும் முன்னேற்றுவது போதுமானது என்று நம்பப்பட்டது.

## ஆசிரியரும் கல்வியும்

இலங்கையில் ஏறக்குறைய இரண்டு இலட்சம் ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். 1994 இல் 195, 175 ஆக இருந்த ஆசிரியர் தொகை 2003 இல் 196, 597 ஆக அதிகரித்தது. இவர்கள் பின்வரும் வகையினராக இருந்தனர்.

வி. தற்பரன்
இணைப்பாளர்,
பட்டப்பின் கல்வி நெறி,
திறந்த பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாண பிராந்திய நிலையம்.

இவற்றில் மொத்த ஆசிரியர் எண்ணிக்கையில் பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை. தனியார் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. தனியார் பாடசாலைகளில் பிரிவேனாப் பாடசாலை ஆசிரியர்களின் தொகையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது தனியார் பாடசாலை முறையின் வளர்ச்சியை வெளிப்படுத்துகிறது. எனினும் விஞ்ஞானப் பட்டதாரியின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் தொகை அதிகரித்திருப்பதும் ஆசிரியர்களின் கல்வி தொடர்பான முன்னேற்றங்களை வெளிப்படுத்துவதாக கொள்ள முடியும். ஆசிரியர்களின் தொழில் செய்யும் ஆற்றலையும் தேர்ச்சிகளையும் முன்னேற்றுவதற்கு ஆசிரியர்கள் போதுமான அளவு கல்வியைப் பெற வேண்டும். முன்பு ஆசிரிய பயிற்சி என இது அழைக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது பயிற்சி என்ற சொல்லும் எண்ணக்கருவும் பெருமளவிற்கு கைவிடப்பட்டு வருகின்றது. இதற்குப் பதிலாக ஆசிரிய கல்வி முக்கியமானதாக கொள்ளப்படுகின்றது. ஆசிரிய பயிற்சி என்பதிலிருந்து ஆசிரிய கல்வி பின்வரும் வகையில் வேறுபடுகின்றது.

1. பயிற்சி என்பது வகுப்பறையில் கற்பித்தல் தொடர்பான பணியை ஆற்றுவதற்குரிய பயிற்சியை வழங்குதலாகும். சேவை முன் பயிற்சியாக அல்லது புத்தூக்கப் பயிற்சியாக அல்லது சேவைக்காலப் பயிற்சியாக இவை வடிவமைக்கப்பட்டிருந்தன. இது உடல் சார்ந்த புலன் சார்ந்த செயல்முறைத் திறனை முன்னேற்றுவதாய் இருந்தது.

2. இது வகுப்பறைக்கு வெளியிலான ஆசிரிய நலன்கள், பாதுகாப்பு,

(அட்டவணை I)

**இலங்கையில் ஆசிரியர் வகையும் தொகையும்**

| ஆசிரியர் வகை | தொகை | |
|---|---|---|
| | 1997 | 2003 |
| விஞ்ஞானப்பட்டதாரிகள் | 4486 | 6110 |
| கலை மற்றும் ஏனைய பட்டதாரிகள் | 43275 | 46930 |
| டிப்ளோமா தகைமை பெற்றோர் (விஞ்ஞானம், விஞ்ஞானமும் கணிதமும்) | 148 | வி.கி. |
| பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் | 85472 | 124205 |
| ஏனையவர்கள் | 54198 | 9450 |
| அரச பாடசாலை ஆசிரியர்கள் | 187579 | 186695 |
| தனியார் பாடசாலை ஆசிரியர்கள் | 3574 | 9902 |
| ஆசிரியர் மொத்த எண்ணிக்கை | 195175 | 196597 |

மூலம்:-*Central Bank of Ceylon - General Education 1994 - 2003*
*Economic and Social Statistics of Sri Lanka - 2004.*

உயர்ச்சி, தொழில் விழுமியம். போன்றவற்றைக் கருத்திற் கொள்ளவில்லை. ஆசிரியரை வெறுமனே பணியாற்றும் நபராக நோக்குவதாயிருந்தது. ஆனால் ஆசிரிய கல்வி என்பது இதிலிருந்து மிகவும் வேறுபடுகின்றது. 21ம் நூற்றாண்டிற்கான கல்வி பற்றிய சர்வதேச ஆணைக் குழுவினால் 1996 இல் சமர்ப்பிக்கப்பட்ட "கற்றல் உங்களுடைய வளமாகும்" எனும் அறிக்கை ஆசிரிய கல்விபற்றிய மீள்கவனத்தை வற்புறுத்தியது. (தேசிய ஆசிரியர் கல்வி அதிகார சபை 2001-01) இதன்படி ஆசிரியர் கல்வி பின்வருவனற்றை உள்ளடக்கும்.

i. ஆசிரியர்கள் உள்வாரியான ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்ட போதனாவியலை புரிந்து கொள்ளல்.

ii. போதுசனத் தொடர்பு சாதனங்களின் அறிவுறுத்தல்களை பின்பற்றல்

iii. மாணவருடனான கலந்துரையாடலை நடாத்துவதற்கான ஆற்றலைப் பெறல்.

iv. தொடர்பு சாதன தகவல்களை தெரிவு செய்து உபயோகிக்கும் ஆற்றலைப் பெறல்.

v. மாணவர்களை தயார்படுத்தும் ஆற்றலைப் பெறல்

> தனியார் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. தனியார் பாடசாலைகளில் பிரிவேனாப் பாடசாலை ஆசிரியர்களின் தொகையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது தனியார் பாடசாலை முறையின் வளர்ச்சியை வெளிப்படுத்துகிறது. எனினும் விஞ்ஞானப் பட்டதாரியின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் தொகை அதிகரித்திருப்பதும் ஆசிரியர்களின் கல்வி தொடர்பான முன்னேற்றங்களை வெளிப்படுத்துவதாக கொள்ள முடியும்.

vi முதியோர் கல்விக்கான அடிப்படைக் கொள்கைகளை அறிந்து கொள்ளும் ஆற்றலைப் பெறல்.

vii தொடர்ச்சியான கல்விச் செயற்பாட்டை நிர்வகிக்கும் ஆற்றலைப் பெறல்.

viii. கற்பித்தல் தேர்ச்சித் திறன்கள் தொழில் வாணண்மைக் கடமைகள் விழுமியங்கள் என்பவற்றை அறிதல்.

ix. தகவல் தொழில் துறைப் புரட்சி, பூகோளமயமாதல் தொடர்பான சவால்களை எதிர் கொள்ளும் ஆற்றலைப் பெறல்.

இவ்வாறான பல திறன்களையும் தேர்ச்சிகளையும் வழங்கும் வகையில் ஆசிரிய கல்வி அமையும் போது ஆசிரியர்கள் கூடுதலான மானிட மற்றும் அறிவு சார் பண்புகளை ஏற்றுக் கொள்வர்.

ஆசிரியர் கல்வி ஒழுங்குடையதாக அமையுமித்து அவர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருப்பர்.

01. கல்வியின் புத்தாளர்களாகச் செயற்படல்

02. சமூகமாற்றங்களை ஏற்படுத்தும் மாற்று முகவர்களாக தொழிற்படுதல்.

03. கல்வி முறையின் சீரமைப்பிற்கு பங்களிப்புச் செய்தல்.

04. பாடசாலை மட்டத்தில் நடைமுறைகளை மேம்படுத்துதல்.

இந்தவகையில் ஆசிரிய கல்வி ஆசிரிய பயிற்சியை விட முழுமையானதாக காணப்படுகிறது. இதனால் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் படிப்படியாக மூடப்படுகின்றன. இதற்குப் பதிலாக தேசிய கல்வியியல் கல்லூரிகள் உருவாக்கப்படுகின்றன. உலக வங்கி தேசிய கல்வியியற்கல்லூரிகளை முன்னேற்றுவதற்கான பல்வகை உதவித் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது. இதனால் வினைத்திறனுள்ள ஆசிரியர்களாக செயற்படுவதற்கு உரிய முழுமையான, கற்பித்தல், வழிகாட்டல், ஆலோசனை கூறல் போன்ற பாடசாலை மட்ட பணிகளை ஆற்றுவதற்குரிய திறன்களையும் தொழில் வாண்மைக்குரிய இயலுமைகளையும் கல்வி வழங்குகின்றது. இலங்கையின் கல்விச் சீர்திருத்த இலக்குகளை செயற்படுத்தும் பல்முனைப்பட்ட செயற்பாடுகளிலும் ஆசிரியர்களின் பங்கு முக்கியமானது. இத்தகைய

வகிபங்கை உறுதிப்படுத்தும் வகையில் ஆசிரியர் கல்வி தொடர்பாக கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ஆசிரிய கல்விக் கொள்கைகள்

இலங்கையில் ஆசிரியர் கல்வி தொடர்பான கொள்கை பற்றி இலங்கையின் பொதுக்கல்வி பற்றி தேசிய கொள்கைச் சட்டகம் ஒன்றிற்கான ஆலோசனைகள் பற்றிய ஆவணம் (தேசிய கல்வி ஆணைக்குழு 2003 : 166) விரிவாக எடுத்துக் கூறுகின்றது.

**01. ஆளுகை**

கல்வி தொடர்பாக தொழிற்படும் பல்வேறு நிறுவனங்கள் சார்ந்த சட்டங்களில் காணப்படும் குறைபாடுகளை அகற்ற வேண்டும் என கருதப்பட்டது. இதற்கான கொள்கைகளை உருவாக்குவதும், அமைச்சு மட்டத்தில் கல்விச் சபை ஒன்றை உருவாக்குவதும் அவசியம் என கருதப்படுகின்றது. ஆசிரிய நிகழ்ச்சித் திட்டங்களிற்கான ஆசிரிய கல்விப் பிரிவு கல்வியமைச்சில் உருவாக்கப்படும். ஆசிரிய கல்விக்குரிய பாடத்திட்ட அபிவிருத்தி மற்றும் பரீட்சைகளிற்கான நிறுவனங்களும் நிறுவப்படும்.

**02. கல்வி நிறுவனங்களும் நிகழ்ச்சித்திட்டங்களும்**

ஆசிரிய கல்விக்கான நிறுவன ஏற்பாடுகள் முக்கியமானவை. ஆசிரியரின் தனிப்பட்ட மற்றும் தொழிசார் வளர்ச்சிக்கு இந்நிறுவனங்கள் உதவுவதோடு அவர்களது சமூக அந்தஸ்தை முன்னேற்றுவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

*கல்வி நிறுவனங்கள் தொடர்பான பின்வரும் விடயங்கள் வற்புறுத்தப்படுகின்றன.*

i. மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்களிற்குரிய கொள்கையின்படி இயங்குதல்.

ii. இயன்றவரை பல்லின பன்மத நிறுவனங்களாக இயங்குதல்.

iii. எல்லா ஆசிரியர்களையும் பட்டதாரிகளாகவும் தொழில்தகைமை பெற்றவர்களாகவும் விருத்தி செய்தல்.

iv. பல்கலைக்கழக கல்விப்பீடம், கல்வித்துறைகள், தேசிய கல்வி நிறுவகம், தேசிய கல்விக் கல்லூரிகள், தொடருரு கல்விக்கான ஆசிரிய கல்வி நிறுவனங்கள்.

v. தொடருரு கல்விக்கான ஆசிரிய நிலையங்கள் என்பவற்றின் மூலம் ஆசிரிய கல்வியை வழங்குதல்.

**ஆசிரிய கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக பின்வருவன முக்கியமானவையாக உள்ளன.**

i. பல்கலைக்கழக கல்விப்பீடங்களும், கல்வித் துறைகளும், தேசிய கல்வி நிறுவகமும், பட்டப்படிப்பு நெறியை வளங்க வேண்டும். பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் வளங்க வேண்டும். இதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்க வேண்டும்.

ii. நாட்டில் தொழிற்படும் 17 தேசிய கல்விக் கல்லூரிகளும் 2 வருட கல்வியை இக்கல்லூரிகளிலும் ஒருவருட உள்ளகப் பயிற்சியை பாடசாலைகளிலும் வழங்க வேண்டும்.

iii. தேசிய கல்விக்கல்லூரிகள், பாடசாலைப் பாடத்திட்டத்தில் சில பகுதிகளை மாத்திரம் கற்பிக்க வேண்டும்.

vi. சில பாடத்திட்ட விடயங்களிற்கு ஏற்றதாக ஆட்சேர்ப்புகளில் மாற்றங்கள் வேண்டும்.

v. சிங்களம், தமிழ், ஆங்கில மொழி போதனைக்கு வேண்டியதான ஆசிரிய தேவையை நிறைவு செய்ய ஏற்பாடுகள் வேண்டும்.

**தொடருரு கல்வி**

ஆசிரிய கல்வியை முன்னேற்றுவதற்கு தொடருரு ஆசிரிய கல்வி வாய்ப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும். பாடசாலைப் பாடத்திட்டத்தில் நிறைவு செய்யப்படாத தேவைகளை நிறைவேற்றுவதற்கு உதவக்கூடிய துரித நிகழ்ச்சித் திட்டங்கள் இதில் உள்ளடக்கப்படுகின்றது. பாடங்கள் சார்ந்த பற்றாக்குறைகள், ஆசிரிய பற்றாக்குறைகள், கல்வித் தொழில் நுட்ப நெருக்கடிகள், தொழில் தகைமை பிரச்சினைகள், சமத்துவம் ஐக்கியம், மனித உரிமை சமூக நியாயம் சார்ந்த பிரச்சனைகள் என்பன இதன் மூலம் நிவர்த்தி செய்யப்படும். ஏற்கனவே உருவாக்கப்பட்ட ஆசிரிய கல்வி நிறுவனங்கள் இவற்றிற்காக பயன்படுத்தப்படும்.

**03. பாடத்திட்ட விருத்தியும் கற்பித்தல் முறையும்**

ஆசிரிய கல்விக்கான பாடத் திட்டத்தை சீர்திருத்த வேண்டியதன்

> ஆசிரிய கல்வி ஆசிரிய பயிற்சியை விட முழுமையானதாக காணப்படுகிறது. இதனால் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் படிப்படியாக மூடப்படுகின்றன. இதற்குப் பதிலாக தேசிய கல்வியியல் கல்லூரிகள் உருவாக்கப்படுகின்றன. உலக வங்கி தேசிய கல்வியியற்கல்லூரிகளை முன்னேற்றுவதற்கான பல்வகை உதவித் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது. இதனால் வினைத்திறனுள்ள ஆசிரியர்களாக செயற்படுவதற்கு உரிய முழுமையான, கற்பித்தல், வழிகாட்டல், ஆலோசனை கூறல் போன்ற பாடசாலை மட்ட பணிகளை ஆற்றுவதற்குரிய திறன்களையும் தொழில் வாண்மைக்குரிய இயலுமைகளையும் கல்வி அமைகின்றது.

அவசியம் உணரப்பட்டுள்ளது. பாடத் திட்ட விடயங்கள் மீளமைக்கப்படுவதும் ஆசிரியர்களிடம் ஆங்கிலம், தொழில் நுட்பம், தொழில் நுட்பதிறன், ஆசிரிய வழிகாட்டல், கணினி அறிவு, இரண்டாம் மொழியாக சிங்களமும், தமிழும் என்பற்றைக் கொண்ட மையப் பாடத்திட்டத்தை வழங்குதல் அவசியம் என கருதப்படுகின்றது.

கல்வித்தலைமைத்துவம், முகாமைத்துவம், இனமத நல்லுறவு, பால் நிலை சமத்துவம், என்பனவும் வற்புறுத்தப்படும். கல்வித் தொழிநுட்பத்தின் முன்னேற்றத்தை முன்னேற்றல், சமூகம் சார்ந்த விழிப்புணர்வை வளர்த்தல் என்பவற்றிலும் கவனம் செலுத்தப்படும்.

ஆசிரிய கல்வியை முன்னேற்றுவதற்கு தொடருரு ஆசிரிய கல்வி வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட வேண்டும். பாடசாலைப் பாடத்திட்டத்தில் நிறைவு செய்யப்படாத தேவைகளை நிறைவேற்றுவதற்கு உதவக்கூடிய துரித நிகழ்ச்சித்திட்டங்கள் இதில் உள்ளடக்கப்படுகின்றது. பாடங்கள் சார்ந்த பற்றாக்குறைகள், ஆசிரிய பற்றாக்குறைகள், கல்வித் தொழில் நுட்ப நெருக்கடிகள், தொழில் தகைமை பிரச்சினைகள், சமத்துவம் ஐக்கியம், மனித உரிமை சமூக நியாயம் சார்ந்த பிரச்சனைகள் என்பன இதன் மூலம் நிவர்த்தி செய்யப்படும். ஏற்கனவே உருவாக்கப்பட்ட ஆசிரிய கல்வி நிறுவனங்கள் இவற்றிற்காக பயன்படுத்தப்படும்.

### 04. தர உறுதிப்பாடு

ஆசிரியர்களின் தொழில், தொழில்த்தன்மை என்பவற்றை தர உறுதிப்பாடு மிக்கதாக மாற்றுவதிலும் கவனம் செலுத்த வேண்டும். ஆசிரிய கல்வி நிறுவன அனுமதிகள், கட்டாய தொடக்க நிலைப்பயிற்சி, ஆசிரியர்கள் கல்விமாணி நிகழ்ச்சியில் இணைதல், தேசிய கல்விக் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர்கள் கல்வி மானிப்பட்டம் பெறல், பட்டதாரி ஆசிரியர் 5 வருடத்தினுள் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டம் பெறுதல் போன்ற அம்சங்களை வற்புறுத்துவதன் மூலம் ஆசிரிய கல்வியின் தரத்தை உறுதிப்படுத்த வேண்டும் என வற்புறுத்தப்படுகின்றது.

### 05. பதவியாளர் விருத்தி

ஆசிரிய கல்வியின் தரமானது ஆசிரிய கல்வி நிறுவனங்களில் கற்பிக்கும் விரிவுரையாளர்களின் கல்வித் தகைமைகளின் தரத்தில் பெரிதும் தங்கியுள்ளது. இதனால் பின்வரும் விடயங்கள் புதிய ஆலோசணைகளாக தெரிவிக்கப்பட்டுள்ளன.

i. பதவியாளர் அபிவிருத்தித்திட்டத்தை உருவாக்கல்

ii. ஆசிரியகல்வித் தகைமையை உயர்த்துவதற்கு உரிய வசதிகளை பல்கலைக்கழகங்களிற்கும் தேசிய கல்வி நிறுவனத்திற்கும் வழங்குதல்.

iii. தேவைக்கேற்ப புலமைப் பரிசில்களை வழங்குதல்.

iv. பயிற்சி பெற்றவர்கள் விசேட துறைகளில் பணி புரியுமாறு வற்புறுத்தல்.

v. ஆசிரிய கல்வியாளர் பதவி உயர்வு பெறுவதற்கேற்ற ஆங்கில தேர்ச்சியை அடைய வற்புறுத்தல்.

இத்தகைய பல்வேறு புதிய முன்மொழிவுகளும் நடைமுறைப் படுத்தப்படுமிடத்து ஆசிரிய முழுமையானதாகும்.

## முடிவுரை

இலங்கை போன்ற நாடுகளில் கல்வி செயலமைப்பின் வெளியீடுகளை தரமுயர்த்தாதவிடத்து கல்வி விரயங்கள் அதிகரிக்கும், சமூக பொருளாதார நெருக்கடிகள் பெருகிவிடும். இளைஞர்களிடையே அமைதியின்மை ஏற்படும். நாட்டின் சமூக, அரசியல் நல்லுறவு பாதிக்கப்படும். இவற்றுள் குறைப்பதற்கும் நீண்ட காலத்தில் அகற்றுவதற்கும் பல்வேறு நடைமுறைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பது உண்மையாயினும், கல்வி உள்ளீடுளை உயர்த்துவதற்கும் முன்னுரிமை வழங்க வேண்டும். அத்தகைய முன்னுரிமைகளில் ஆசிரியதரத்தை மேம்படுத்துவது அவசியமாகும். அதற்கு ஆசிரிய கல்வியை புதிய மாதிரியில் வடிவமைத்து வினைத்திறன் மற்றும் விளைதிறன் மிக்கதாக, செயற்படுத்துவது அவசியம். இதற்குரிய குறுங்கால மற்றும் நீண்டகால திட்டங்களை தயாரித்து, தேவையான வளங்களை ஒதுக்கீடு செய்து நடைமுறைப்படுத்த வேண்டும். பொருத்தமான இடைக்கால மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். இவற்றை ஒழுங்காக நிறைவேற்றுமிடத்து ஆசிரிய வினைத்திறன் கூடி கல்விச் செயலமைப்பில் வினைத்திறனும் விளைதிறனும் அதிகரிக்கும் என எதிர்பார்க்க முடியும்.

### Reference


1) Central Bank of Sri Lanka
- (2004) Recent Economic Development, Colombo

Central Bank of Sri Lanka
- (2004) Economic and Social Statistic of Sri Lanka Colombo.

2) தேசிய கல்வி ஆணைக்குழு (2003) - மனித விருத்திக்கான கல்வி பற்றிய தொலை நோக்கு நாவல.

3) தேசிய ஆசிரிய கல்வி அதிகாரசபை (2001) தேசிய ஆசிரியர் கல்விக்கொள்கை, பத்தரமுல்ல.

# ஆசிரியர்களின் கற்கும் கற்பிக்கும் சுதந்திரம்

## கற்பிக்கும் உரிமையும் கற்கும் உரிமையும

சுதந்திரமான சிந்தனையும் கருத்துச் சுதந்திரமும் சகல சுதந்திரத்திற்கும் மூலாதாரமாகவிருப்பதால் கற்கும் சுதந்திரத்தை மறுப்பது ஜனநாயகத்திற்கு எதிரான குற்றமாகும்" என ஜோண்டுயி தனது நூலொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

"ஆசிரியர்கள் தமது கடமைகளை நிறைவேற்றும் பொழுதுமான ஆசிரியத் தொழிலின் கல்விச் சுதந்திரமும் பேணப்படுதல் வேண்டும்." என சர்வதேச தொழிலாளர் தாபனமான யுனெஸ்கோவின் ஆசிரியர் அந்தஸ்து தொடர்பான பரிந்துரையின் எட்டாவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அ) வரைவிலக்கணம்

மேலும் தன்னிடம் கையளிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கான குறிப்பிட்ட கல்வி இலக்குகளை அடைவதற்கு ஒரு தகைமையுள்ள ஆசிரியர் தனது அறிவு, திறன் என்பவற்றை பயன்படுத்தி கற்பிக்கும் சுதந்திரமே கற்பித்தல் சுதந்திரமாகும். ஆசிரியர் ஒருவர் தன்னைச் சார்ந்துள்ள மாணவர்களினதும், தனது எதிர்காலத்தையும் நிர்ணயிக்கும் பொதுக் கல்வியின் எல்லா விடயங்களின் தீர்மானம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளிலும் பங்கேற்க வேண்டும். இதில் தான் பணியாற்றும் புலத்திறனூடாகவோ, அல்லது ஆசிரியத் தொழிற்சங்கத்தினூடாகவோ நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்பட வேண்டும்.

மாணவரின் சகல கற்றல் விடயங்களிலும் ஆசிரியர் ஒருவர் ஈடுபாடு கொண்டவராக இருக்க வேண்டும். இது வகுப்பறைக் கற்பித்தலாகவோ, குழு முயற்சியாகவோ அல்லது பாடசாலைச் செயற்பாடுகளாகவோ இருக்கலாம். இது மாணவர் கணிப்பீடு, மாணவர் பின்னூட்டலுக்கான பல்தரக் கணிப்பீடுகள் என்பனவற்றை உள்ளடக்கியது.

மாணவரின் சகல கற்றல் விடயங்களிலும் ஆசிரியர் ஒருவர் ஈடுபாடு கொண்டவராக இருக்க வேண்டும். இது வகுப்பறைக் கற்பித்தலாகவோ, குழு முயற்சியாகவோ அல்லது பாடசாலைச் செயற்பாடுகளாகவோ இருக்கலாம். இது மாணவர் கணிப்பீடு, மாணவர் பின்னூட்டலுக்கான பல்தரக் கணிப்பீடுகள் என்பன வற்றை உள்ளடக்கியது.

மேலும் இது ஒரு சனநாயகத் தன்மையுடையதாகவோ அல்லது வேறு வகையிலானதாகவோ அரசு இருந்தாலும் ஆசிரியர் ஒருவருக்கு கற்பித்தல் சுதந்திரம் அவசியமானதாகும். ஆசிரியரின் மாணவரின் இந்த சுதந்திரத்தை முன்னேற்றுவதற்கும் பாதுகாப்பதற்கும் ஆசிரியத் தொழிற் சங்கம் ஏதுவாகவிருக்க வேண்டியது அவசியமானதாகும்.

### ஆ) ஆசிரியரின் சுதந்திரமான கற்பித்தலுக்கு இருக்க வேண்டியவை.

* நிலவும் வாய்ப்புகள் மூலம் தொழிண்மையை மேம்படுத்தக் கூடியதாகவிருத்தல்.
* நியாயமான சம்பளம்
* பாதுகாப்பான, வெளித்திறந்த சூழ்நிலையில் கற்பித்தல் பணியில் ஈடுபடக் கூடியதாகவிருத்தல்.
* சக ஆசிரியர்களுடன் இணைந்து பணியாற்றல்.
* வினைத்திறனுடனான கற்பித்தலையும் ஆய்வுகளையும் மேற்கொள்ளக் கூடியதான வளங்களை இலகுவில் பெறக் கூடியதாகவிருத்தல்.
* ஆசிரிய தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடியதாகவிருத்தல்

மொத்தத்தில் ஆசிரியர் ஒருவருக்கு தனது நிறுவனத்தில் சிறந்த

சி. சரவணபவானந்தன்
நிருவாகச் செயலாளர்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

கல்விப் பாங்குள்ள தலைமைத்துவத்துக்கான உரிமை இருக்க வேண்டும்.

இவ்வாறான தலைமைத்துவத்தின் மூலம் கற்பித்தல் சார்பற்ற பணிகளை குறைத்து கற்பித்தலில் ஈடுபட வழிசமைக்க வேண்டும். சில சந்தர்ப்பங்களில் ஆசிரியர் ஒருவர் மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு வகுப்பறையில் இருக்க முடியாது போவதுமுண்டு. மாணவர்களுக்கு இயல்பிற்கு புறம்பான கற்றல் சூழ்நிலையிலும் கற்கும் உரிமை உண்டு. விசேடமாக முறைசார்ந்த பாடசாலைச் சூழ்நிலையிலிருந்து விடுபடவேண்டிய சந்தர்ப்பங்களைக் கூறலாம். அவ்வாறன சந்தர்ப்பங்களாக வறுமை, கல்வியறிவற்ற பெற்றோர் மற்றும் பாடசாலைச் சீருடை இல்லாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இக் காரணத்தால் மாற்றீடான ஒரு கல்வி முறைக்கு இவர்கள் தள்ளப்படுகிறார்கள்.

"கல்வி முறைமையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடைவுமட்டத்தை எய்துவதற்குரிய அறிவு, திறன் என்பற்றை பெறுவதற்கான சுதந்திரமே" ஒரு மாணவரின் கற்றல் சுதந்திரமாகும். அதுவே கற்றல் சூழல் மூலம் பெரியவவர் ஆவதற்கான சுதந்திரமும் கூட எனக் கொள்ளலாம்.

மாணவரின் உரிமையென்பது கல்வி மூலம் பெறக் கூடியவற்றை அவரின் பால்நிலை, வயது, விசேடதேவைகள், சமய நம்பிக்கைகள் மற்றும் பிறயதார்த்தங்கள் என்பனவற்றிற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். உதாரணமாக:- உலகிலுள்ள பெண் பிள்ளைகள் கல்வி மூலம் பெற வேண்டிய நன்மைகள் மறுக்கப்படுகின்றன. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒரு மாணவர் கற்றல் சுதந்திரத்தைக் கொண்டிருப்பது மட்டுமல்ல தரமான கல்வியைப் பெறுவதற்கும் உரிமையுடையவர். அங்கே பாடசாலை முறைமைக்கு வெளியேயும் தரமான கல்வியைப் பெறுவதற்கு தடைகள் ஏற்படலாம்.

கட்டமைப்பினுள் காணப்படும் சில விடயங்கள் தரமான கல்வியைப் பெறுவதற்கு தடையாக அமைந்துவிடுகின்றன. அவையாவன ஒதுக்கப்படும் நிதிப்பற்றாக்குறை, கல்வி முறைமையில் ஒதுக்கிடும் நிதிப் பயன்பாடும் கல்வியை பெறமுடியாமையும், வகுப்பறை அளவு, பாடசாலை அளவு, தகமையுள்ள ஆசிரியர் போதாமை, வசதிகள் உபகரணங்கள் பற்றாக்குறை, சுகாதார வசதிகள் போதாமை, பாடநூல்கள், பிறவளங்கள் என்பன ஆகும். பல் தரப்பட்ட புறத்தாக்கங்கள் பாடசாலைக்குள் மாணவரின் கற்கும் ஆற்றலைப் பாதிக்கிறது. இவற்றில் சமூகச் சூழல், கடுமையான வறுமை, போசாக்கின்மை, குடியிருப்பு வசதியின்மை, உடல் உளத் தாக்கம், குழந்தைத் தொழில். அகதி வாழ்வு, இடம் பெயர்வு, மாற்ற தன்மை என்பனவும் அடங்கும்.

> "கல்வி முறைமையின் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடைவு மட்டத்தை எய்துவதற்குரிய அறிவு, திறன் என்பற்றை பெறுவதற்கான சுதந்திரமே" ஒரு மாணவரின் கற்றல் சுதந்திரமாகும். அதுவே கற்றல் சூழல் மூலம் பெரியவவர் ஆவதற்கான சுதந்திரமும் கூட எனக் கொள்ளலாம்.

கல்வி கற்பிக்கும் சுதந்திரம் எந்த சர்வதேச பிரகடனத்தாலோ, பரிந்துரையாலோ, அல்லது சட்டவாக்கத்தாலோ மட்டுப்படுத்தப்படவில்லை. பிள்ளைகளின் உரிமையினூடாக இதனைப் பார்த்தால் தரமுள்ள கல்வியைப் பெறும் உரிமை உண்டு.

## அ. பிள்ளை உரிமைப் பிரகடனம்

சகல குழந்தைகளும் ஆகக்குறைந்தது ஆரம்ப நிலைக்கல்வி கட்டாயமாகவும் இலவசமாகவும் பெறும் உரிமை உடையவர்களாவர். சமூகத்திற்கு பயனுள்ள ஒரு பிரசையாவதற்குரிய சமூகப் பொறுப்புள்ள. சுயசிந்தனையுள்ள தனது ஆற்றல்களைச் சம வாய்ப்பின் மூலம் விருத்தி செய்வதை உறுதி செய்யக்கூடிய, அவரின் பொதுவாழ்விற்குரிய பாங்கினை வெளிப்படுத்தக்கூடிய கல்வியை வழங்கக் கூடியதாகவிருக்க வேண்டும்.

**ஆசிரியர் அந்தஸ்து தொடர்பான சர்வதேச தொழிலாளர் தாபன யுனெஸ்கோவின் பரிந்துரை வழிகாட்டிகள் :**

ஆசிரியர் தன் ஆசிரியத் தொழில்மையில் தனது முழுமையான கவனத்தை செலுத்துவதற்கு வசதியாக வினைத்திறனுடனான கற்றலை முன்னேற்றக் கூடிய சேவை நிபந்தனைகளை ஆசிரியர்கள் கட்டாயமாக பெறக்கூடியதாகவிருக்க வேண்டும்.

## ஆ. கற்றல் கற்பித்தலுக்கான நிபந்தனைகள்

கல்வி கற்பிப்பதற்கும் கற்பதற்குமான உரிமையானது சாதகமான பௌதீக உளவியற் சமூக பொருளாதார அம்சங்கள் பூரணப்படுத்தப்படும் போதுதான் உண்மையான கல்வி கிடைக்கக்கூடியதாகவிருக்குமென்பதை வரையறுக்க முடியும். வகுப்பறைக்கு ஒருவரை மாணவர் முன்பாக நிறுத்துவதன் மூலம் கல்வி கிடைத்துவிடுமென்று எண்ண முடியாது.

ஒரு தகைமையுள்ள ஆசிரியர் மூலம் மாணவர் வினைத்திறனுடன் கற்கும் நிகழ்சினூடாகவே இது நிகழும் விடயமாகும் என்பதை கவனத்திற்கொள்ள வேண்டும். இதனை தொழில்மை ஆசிரியத்தினூடாக அறிவு வாழ் திறன்கள் போன்றவற்றை மாணவர்கள் பெற்றுக்கொள்ள, தகைமையுள்ள ஆசிரியரினால் மாத்திரமே மாணவரிடம் புதைந்துள்ள

| நிபந்தனைகள் | பிள்ளை | ஆசிரியர் |
| --- | --- | --- |
| பௌதீகச் சூழல் | பொருத்தமான கற்றலுக்குரிய உபகரணங்களுடனான சூழல்<br>வகுப்பறைச் சூழல்<br>பாடசாலைச் சூழல்<br>பாட நூல்களுடன் ஏனைய வளங்கள்<br>பாடசாலைச் சீருடையுடன் பாதணிகள்<br>உணவு போக்குவரத்து வசதி | பொருத்தமான கற்றலுக்குரிய உபகரணங்களுடனான சூழல்<br>வகுப்பறைச் சூழல்<br>வன்முறையற்ற சமாதான நிலவுகை<br>வகுப்பறையில் பொருத்தமான மாணவர் தொகை,<br>பாடசாலைச் சூழல்<br>கற்பித்தல் உபகரணங்கள்,<br>உணவு, போக்குவரத்து வசதி |
| உளம் சார்ந்த | தனது ஆற்றல்களை பூரணமாகவிருத்தி செய்ய விரும்பும் ஒவ்வொரு மாணவரையும் மதித்து நடத்துதல் இது பிள்ளையின் உரிமை. மொழி, இனம், பால்வேறுபாடு, வலது குறைந்த நிலை போன்ற இன்னோரென்னவற்றிற்குப் புறம்பாக ஒவ்வொரு பிள்ளையின் தனித்துவத்தை மதித்து நடத்தல் மனித உரிமை ஆகும். | ஆசிரியரின் தொழில்மையையும், ஆசிரியர் தொழிலைப் புலமைத் தொழிலாகவும் மதித்தல் ஆசிரியர் தொழில் உரிமைகள் தொழில் நடுநிலமை. மொழி, இனம், பால்வேறுபாடு வலது குறைந்த நிலை போன்ற இன்னோரென்னவற்றிற்குப் புறம்பாக ஒவ்வொரு பிள்ளையின் தனித்துவத்தை மதித்து நடத்தல் மனித உரிமை ஆகும். |
| சமூகப் பொருளாதார நிலை | முழுமையான கற்பித்தல் காலத்தை எய்த முடியுமென்ற நம்பிக்கையுடன் மனக்கிலேசமின்றிக் கற்றல்.<br>குழந்தை தொழில் முறை,<br>வறுமை, வீடில்லாமை, எயிட்ஸ் / எச்ஐவி. | முழுமையான கற்பித்தல் காலத்தை எய்த முடியுமென்ற தைரியத்தை கொண்டிருத்தல்.<br>வறுமை, வீடில்லாமை எயிட்ஸ் / எச்ஐவி. |

திறன்களை வெளிக்கொண்டு வர முடியும். அதன் மூலமே சமூகத்தின் பால் சாதகமான இடைத்தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு மனிதத்துவத்திற்குள் மாணவர் புகமுடியும். சில வகையான நிபந்தனைகளூடாக இதைச் சாராம்சமாக மேலேயுள்ள அட்டவணை மூலம் காட்டலாம்.

ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக நல்ல ஆசிரியர்கள் கூடப் பாடசாலைகளில் நிலைத்து நிற்க முடியாத நிலை இன்று ஒரு தேசிய பிரச்சினையாகவுள்ளது. தரமான கற்பித்தலுக்கு இது தீங்காக அமைந்து விடுகிறது.

**கற்றல் கற்பித்தலை விருத்தி செய்வதற்கு பொருத்தமான வழிமுறைகள் சில**

1) ஆய்வு அறிக்கைகளில் மாணவர் எவ்வாறு கற்கின்றனர் என்று கூறப்படும் முறைகளின் பிரகாரம் பாடசாலைகளை நடாத்துதல்.

2) பாடசாலைகளுக்கு தேவையான நிதியைப் போதிய அளவு ஒதுக்குவதன் மூலம் போதியளவு நிதியைப் பெற்று கல்வித் தேவையை பெறக் கூடியதாகவிருக்க வேண்டும்.

3) மாணவர்களை அறியாதிருப்பதையும், தனிமைப்படுத்துவதையும் நீக்குதல், குறைந்தளவிலான கற்றல் சமூகங்களின் ஆக்கத்திறனை ஊக்குவித்தல், பாரியளவிலான குறைந்த வெளிப்பாடுடைய பாடசாலைகளுக்கு மீள் ஒதுக்கீடு செய்தல்.

4) மேற்பார்வையாளர்கள் அதிபர்கள் ஆசிரியர்கள் வேறுபாடசாலைத் தலைவர்கள் ஆகியோரைத் தெரிவு செய்தல் தயார்ப்படுத்தல், அத்தொழிலில் நிலைத்திருத்தல் கௌரவித்தல், இவர்கள் பாடசாலையின் திறமையையும் தோற்றப்பாட்டையும் வெளிக்கொணர்வர் அதன் மூலம் ஆசிரியர் சங்கங்களுடன் இணைந்து 21ம் நூற்றாண்டின் எதிர்பார்ப்புகளை கண்டடைய முடியும்.

**கவனத்திற் கொள்ள வேண்டிய பின் நிபந்தனைகள்**

01. நோக்கம் :
ஓர் உறுதியான அரச பாடசாலை முறைமை மூலமாக சிறந்த தன்மை, சமத்துவம் என்பனவற்றை ஒருவர் மிக உயர்ந்த நிலையில் பெறக்கூடியதான ஓர் உறுதியான அரச பாடசாலை முறைமை தேவைப்படுகிறது.

02. ஆளுகை :
முன்னேற்றங்களைக் கண்காணிப்பதற்கும், பரந்த வழிகளை அமைப்பதற்கும் பாடசாலைகள் அரசுடன் இணைந்த தீர்மானம் மேற்கொள்ள வேண்டும்.

03. முரண்பாடற்ற தன்மை :
பெறுபேறுகளை தரக்கூடிய நோக்குடைய, இறுக்கமான கல்விமுறைமையை ஒரு சிறு எண்ணிக்கையைக் கொண்ட நீண்ட, திட்டங்கள் அரசிற்கு அவசியமாகும்.

04. சான்று :
மாணவரின் கற்றல் ஏதுக்கள் முன்னேற்றுவதற்கு உதவும் என்ற ஆய்வு சான்றுகளின் அடிப்படையில் கொள்கையை உருவாக்குவதோடு அத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது பற்றியும் கூறுதல் வேண்டும்.

05. ஆசிரியர்களுக்கு உதவுதல் :
அரசு வெறுமனே கொள்கைகளை வகுப்பதோடு நிறுத்தாமல் ஆசிரியர்களோடும், அதிபர்களோடும் ஒன்றிணைந்து கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

ஆசிரியர்களுக்கு கற்பிப்பதற்கான முழுப்பாதுகாப்பு தேவையானதும் உரித்தானதுமாகும். அதேவேளை மாணவனுக்கு கற்கும் சுதந்திரமும் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். இதுவே ஜனநாயகத்தின் அடிப்படையுமாகும். இது ஆசிரியரின் புலமை, தொழிற் திறமை என்பனவற்றை கருத்தில் கொள்ளும் விடயமாகும். ஆனால் இன்றுள்ள போக்குகள் ஆசிரியரின் கற்றல் கற்பித்தல் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாகவிருக்கின்றன.

(நெல்சன் ஸ்டான்லி 2001)

06. பின்னூட்டலும்நடைமுறைப்படுத்தலும்:
தடைகளை இனம் காண்பதற்கும் அவற்றிலிருந்து விடுபடுவதற்கும் உதவுவதன் மூலமும் இடையிடையே ஒழுங்கான பின்னூட்டல் மேற்கொளவதன் மூலம் முன்னேற்றங்களை அரசு மேற்பார்வை செய்ய வேண்டும்.

07. போதிய நெகிழ்விற்குரிய நிதி வழங்கல்:
இவ்வொழுக்கீடுகளை பாடசாலைகள் தமது கடந்த கால செலவு இருக்கை அல்லது நிகழ்காலத் தேவைக்கு போதுமான அளவில் உண்மைச் செலவுகளை ஈடு செய்யக்கூடியதாக நிதி ஒதுக்கீடு செய்தல் வேண்டும். அதனைப் பாவிப்பதற்கு கீழ்மட்ட நிலையில் மேலும் நெகிழ்வுத்தன்மை இருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட முன் மொழிவுகளை நடைமுறையிலிடுவதன் மூலம் பொருத்தமான ஜனநாயகம் நிலவும். இதை வேறு முறையில் கூறுவதானால் அரசு கற்பதற்கான சுதந்திரத்தையும் கற்கும் சுதந்திரத்தையும் போற்றுகிறது என்று பொருள் கொள்ளலாம்.

## கற்பித்தல் சுதந்திரத்தையும் கற்றல் சுதந்திரத்தையும் பாதுகாத்தல்

ஆசிரியர்களுக்கு கற்பிப்பதற்கான முழுப்பாதுகாப்பு தேவையானதும் உரித்தானதுமாகும். அதேவேளை மாணவனுக்கு கற்கும் சுதந்திரமும் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். இதுவே ஜனநாயகத்தின் அடிப்படையுமாகும். இது ஆசிரியரின் புலமை, தொழிற் திறமை என்பனவற்றை கருத்தில் கொள்ளும் விடயமாகும். ஆனால் இன்றுள்ள போக்குகள் ஆசிரியரின் கற்றல் கற்பித்தல் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாகவிருக்கின்றன.

(நெல்சன் ஸ்டான்லி 2001)

### அச்சுறுத்தலாக அமைபவை சில

* கல்விக்கான நிதி வளம் போதாமை
* கல்வி சார்பில் தீர்மானம் மேற்கொள்ளும் கொள்கைகள் ஆசிரியர்களுக்கு எட்டாததாக இருப்பதோடு இது அரசியல் தீர்மானங்கள் மூலம் பிரதியீடு செய்யப்படுகிறது.
* கல்வியை தனியார் மயப்படுத்தல்
* பாடத்திட்டம் அரசினாலும் பாடசாலை சபைகளினாலும் நடத்தப்படுகிறது.
* பாடசாலைக்குப் போதலை, ஆசிரியர்களை அரசும் ஊடகத்துறையும் கண்டித்தல்.
* கல்வி சீர்திருத்தம் தொடர்பில் பொது மக்களின் நியாயமற்ற எதிர்பார்ப்புகள்.
* அடிப்படைவாதச் சமயக் குழுக்கள் தேசப்பற்றுக் குழுக்கள் என்பன குறிப்பிட்ட சில விடயத்தை அல்லது முறையை வகுப்பறைகளில் பின்பற்ற வேண்டுமென்று வலியுறுத்துவது.
* கருத்துச் சுதந்திரத்துக்கு தடை போடுவது.

ஆசிரியர்கள் இயல்பாகவே மேலே குறிப்பிட்ட அச்சுறுத்தலிற்கு ஆளாகுவதால் அவ்விடயங்களில் கற்பித்தல் சுதந்திரம் கேள்விக் குறியாகிறது. மறுபுறத்தில் மாணவரின் கற்றல் சுதந்திரமும் ஆபத்துக்குள்ளாகிறது. இதனால் ஆசிரியர்கள் தமது உரிமைகளுக்கான விழிப்புணர்வுடனிருப்பதில்லை. நிகழ்கால அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு, ஆசிரியர் - மாணவர்களின் உரிமைகளைக் காக்க ஆசிரியத் தொழிற்சங்கங்கள் முக்கியமான இடத்தை வகிக்கும். இது ஆய்வுகள், ஆசிரியர்கள் முன்மொழிவுகள், ஆசிரியர் விருத்தியும் பயிற்சியும் என்பன ஊடாக ஆசிரியர் - மாணவர் கற்றலை உறுதிசெய்யும் பொருட்டு அரசுடனும், வேலை கொள்வோருடனும் பேச்சிற்குச் செல்லுதல், பேரம் பேசுதலுக்கு வழிவகுக்கும்.

சகல மட்டங்களிலும் தீர்மானம் மேற்கொள்ளுதலில் ஆசிரியர்களை புதிய கருத்தாடலுக்கு ஈடுபட வைக்கும் கங்கரியத்திற்கு ஆசிரியர் சங்கங்கள் உதவுகின்றன.

## முடிவுரை

ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோர்க்கு ஆய்வுக்கான எண்ணங்கள் அவசியம். கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் புதிய முறைகளை சோதிப்பதும், முன்னேற்றுவதும் இதற்கு அவசியமாகிறது. இது ஜனநாயகத்திலான அல்லது வேறுவகையான தரப்பிற்கும் பொருந்தும். ஆசிரியர்களின் மாணவர்களின் எண்ணங்களை தடை செய்வதன் மூலமோ தடுப்பதன் மூலமோ நிறுத்த முடியாது. சிறந்த கற்றல், கற்பித்தல் நிலைள் மூலம் அறிவைத் தேட வேண்டியது அவசியமாகும். ஆசிரியர்கள் கற்பித்தலுக்கான சுதந்திரத்தை கொண்டிருக்கும் அதேவேளை மாணவர்கள் தமக்குரிய கற்கும் சுதந்திரத்திற்கும் உரியவர்கள் ஆவார். இவ் உரிமையை மாணவர் முழுமையாகப் பெறுவதற்கு தகைமையுள்ள ஆசிரியர் அவசியம். 2004 உலக ஆசிரியர் தினத்தின் தொனிப்பொருளும் அதையே எமக்கு உணர்த்துகிறது. "தரமான கல்விக்கு தகைமையுள்ள ஆசிரியர்" என்பதே கடந்த வருட உலக ஆசிரியர் தினத்தின் தொனிப்பொருளாக சர்வதேச கல்வியகம், யுனெஸ்கோ என்பன பிரகடணப்படுத்தியுள்ளன. அத்தோடு கல்விமுறையில் தகைமையுள்ள ஆசிரியர்களை சேவைக்கு உள்ளெடுத்தலும் சேவையில் தொடர்ந்து வைத்திருத்தலும் மிக அவசியமான தேவையாகவுள்ளது. ❑

---

"கல்வி உளவியல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களைப் பற்றியது ஆகும். தம்மைப்பற்றியே அறியவும் தம்தொழிலில் வெற்றி காணவும் கல்வி உளவியல், ஆசிரியர்குப் பெரிதும் உதவுகிறது. ஆசிரியத் தொழிலில் வெற்றி காண, இத்தொழிற்காண ஆற்றல்களில் மேலும் மேலும் வளர்ச்சியடைய (*Professional Growth*) ஆசிரியர் விழைதல் இன்றியமையாதது. இவ்வாறு தொழில் வளர்ச்சினைத் தொடர்ந்து பெறுவதற்கு ஆசிரியர் தம்மைத்தாமே மதிப்பிட்டுணர்தல் வேண்டும். இம்மதிப்பீட்டினால் தம்மிடமுள்ள நிறைகளையும் குறைகளையும் உணர்ந்து, நிறைவுகளை மேலும் வளப்படுத்தலும் குறைகளை நீக்க முயலுதலும் அவர்க்கு இயலும். இத்தகைய மதிப்பீடு உளவியலறிவினையே அடிப்படையாகக் கொண்டு அமைவதாம்"

— எஸ். சந்தானம், கல்வி உளவியல் ஓர் அறிமுகம் 1989, பக் 273

"ஆசிரியர் பயிற்சியின் நோக்கங்கள் இன்று விரிவும் தெளிவும் பெற்றுள்ளன. ஆசிரியப் பணியினைச் சிறப்பாக ஆற்றுதலில் என்னென்ன திறன்கள் தேவை என்பது ஆராயப் பெற்று, இத்திறன்கள் ஊக்குவிக்கப் பெற்று வலுப்பெறும் வகையில் ஆசிரியப் பயிற்சிக்கான கல்வி ஏற்பாடு தற்போது அமைக்கப்படுகிறது. ஆசிரியப் பயிற்சியில் தற்போது 'தரம்' வலியுறுத்தப்படுகிறது.'

— எஸ். சந்தானம், கல்வி உளவியல் ஓர் அறிமுகம் 1989, பக் 286

❑

# தீர்மானம் மேற்கொள்ளல்: விளைதிறன்மிக்க ஆசிரியருக்கான அடிப்படைத் தேர்ச்சி

தை. தனராஜ்
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம

## அறிமுகம்

தீர்மானம் மேற்கொள்ளல் என்பது எமது வாழ்க்கையின் பிரிக்க முடியாத அம்சமாகும். காலையில் எத்தனை மணிக்கு படுக்கையை விட்டு எழும்ப வேண்டும் என்பதிலிருந்து எத்தனை மணிக்கு திரும்பவும் நித்திரைக்கு செல்ல வேண்டும் என்பது வரை எமது நாளாந்த வாழ்க்கையில் நாம் எண்ணிறைந்த தீர்மானங்களை மேற்கொள்கிறோம். இத்தகைய சாதாரண, நாளாந்த தீர்மானங்களை மட்டுமல்லாது எமது வாழ்க்கையின் போக்கினை மாற்றியமைக்கக்கூடிய காத்திரமான தீர்மானங்களும் உள்ளன. படிப்பு, தொழில், திருமணம், குழந்தைகளின் எண்ணிக்கை, குடியிருக்கும் இடம், சொந்த வீடு கட்டுதல், வாகனம் வாங்குதல் போன்ற மிகவும் முக்கியமான விடயங்களில் ஒருவர் எடுக்கும் தீர்மானங்கள் தான் அவரது வாழ்க்கையின் வெற்றியையோ அல்லது தோல்வியையோ நிர்ணயிக்கின்றன.

தீர்மானம் மேற்கொள்ளல் என்பது குறித்த ஒரு செயலாக இருக்கலாம் அல்லது ஒரு பொதுவான செயன் முறையாகவும் இருக்கலாம். எவ்வாறெனினும் தீர்மானம் மேற் கொள்ளல் என்பது "ஒரு தொகுதி மாற்றீடு (alternatives)களிலிருந்து ஒரு மாற்றீடை தெரிவு செய்கின்ற தொரு செயன்முறை" ஆகும். அவ்வாறான தெரிவு அவரது நோக்கத்தை அடைவதற்கு மிகவும் பொருத்தமாக இருக்குமெனில் அதனையே நாம் "விளைதிறன்மிக்க தீர்மானம் மேற்கொள்ளல்" (*Effective decision - making*) என்கிறோம்.

ஆகவே எவ்வாறு தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என்பது ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய அடிப்படைத்தேர்ச்சி (Core Competency) ஆகும். அதுவும் ஆசிரியருக்கு இத்தேர்ச்சி மிகவும் முக்கியமானது. ஆசிரியர் தனது நாளாந்த தொழில்சார் வாழ்க்கையில் பல்வேறு தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. வகுப்பறையில் எதனை, எவ்வாறு, எவ்வளவு நேரத்துக்குள் கற்பிக்க வேண்டும் என்பதை மட்டுமல்ல மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கக்கூடிய காத்திரமான தீர்மானங்களையும் அவர் எடுக்க வேண்டியுள்ளது.

தீர்மானம் மேற்கொள்ளல் தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தீர்மானத்தின் வகைகள், தீர்மானம் மேற்கொள்ளப்படுகின்ற செயன் முறை, குழுவாகத் தீர்மானம் மேற் கொள்ளல், அதன் நன்மை தீமைகள் போன்றவற்றைக் கோட்பாட்டு ரீதியாக இக்கட்டுரை விளக்க முயல்கிறது.

## தீர்மானம் மேற்கொள்ளல் என்றால் என்ன?

தீர்மானம் மேற்கொள்ளல் என்பது குறித்த ஒரு செயலாக இருக்கலாம்; அல்லது ஒரு பொதுவான செயன்முறையாகவும் இருக்கலாம். எவ்வாறெனினும் தீர்மானம் மேற் கொள்ளல் என்பது "ஒரு தொகுதி மாற்றீடு (alternatives) களிலிருந்து ஒரு மாற்றீடை தெரிவு செய்கின்ற தொரு செயன்முறை" ஆகும். அவ்வாறான தெரிவு அவரது நோக்கத்தை அடைவதற்கு மிகவும் பொருத்தமாக இருக்குமெனில் அதனையே நாம் "விளைதிறன்மிக்க தீர்மானம் மேற்கொள்ளல்" (Effective decision-making) என்கிறோம்.

தீர்மானம் மேற்கொள்ளலை ஒரு பொதுவான செயன் முறையாகக் காணும் போது "தான் விரும்புகின்ற நிலைமைக்கும் தற்போதைய நிலைமைக்கும் இடையிலுள்ள தடையினை ஒருவர் படிப்படியாக நீக்குகின்ற செயன்முறை"யும் தீர்மானம் மேற்கொள்ளலாக அமைகிறது.

ஆசிரியர் குறிப்பிட்டதொரு பாடப்பொருளை குறிப்பிட்ட நேரத்தில் கற்-

பிக்க வேண்டும் என்று தீர்மானிப்பது ஒரு செயலாக அமைகிறது. அதேபோல அவ்வாசிரியர் தமது மாணவர்கள் அனைவரும் அப்பாடப்பொருளை பூரணமாக விளங்கிக் கொள்வதை உறுதி செய்து கொள்வதற்காக படிப்படியாக மேற்கொள்கின்ற தீர்மானங்கள் யாவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டிருக்கின்ற காரணத்தினால் அது தீர்மானம் மேற்கொள்கின்ற செயன்முறையாக அமைகிறது. எனவே வகுப்பறையில் ஆசிரியர் மேற்கொள்கின்ற செயற்பாடுகள் அனைத்தும் அவர் மேற்கொள்கின்ற தீர்மானங்களே. தமது பாடத்தின் நோக்கங்களை வெற்றிகரமாக அடைகின்ற ஆசிரியர் விளைதிறன் மிக்கத் தீர்மானங்களை மேற்கொள்கின்ற தேர்ச்சியை பெற்றுள்ளார் எனக்கொள்ள முடியும். இதனுடைய மறுபக்கம் யாதெனில் பாடத்தின் நோக்கத்தைப் பூரணமாக அடையத் தவறுகின்ற ஆசிரியர், தீர்மானம் மேற்கொள்கின்ற தேச்சியில் உரிய மட்டத்தை இன்னும் அடையவில்லை என்பதாகும்.

ஆசிரியர் குறிப்பிட்டதொரு பாடப் பொருளை குறிப்பிட்ட நேரத்தில் கற்பிக்க வேண்டும் என்று தீர்மானிப்பது ஒரு செயலாக அமைகிறது. அதேபோல அவ்வாசிரியர் தமது மாணவர்கள் அனைவரும் அப்பாடப்பொருளை பூரணமாக விளங்கிக் கொள்வதை உறுதி செய்து கொள்வதற்காக படிப்படியாக மேற்கொள்கின்ற தீர்மானங்கள் யாவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டிருக்கின்ற காரணத்தினால் அது தீர்மானம் மேற்கொள்கின்ற செயன்முறையாக அமைகிறது.

### தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறை

ஒவ்வொரு தீர்மானத்தையும் மேற்கொள்ளும்போது நாம் ஒரு படிமுறையைப் பின்பற்றுகிறோம். இப்படியான முறையை வரைபடம் 1 காட்டுகிறது.

மேற்படி வரைபடம் கோட்பாட்டு ரீதியாக தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையை விளக்க முனைகிறது. உதாரணமாக ஆறாம் தர வகுப்பாசிரியர் திரு. கேசவன் தனது மாணவர்களை ஒரு களப்பயணம் கூட்டிச் செல்ல எண்ணுகின்றார் எனக்கொள்வோம். முதலில் திரு. கேசவன் களப்பயணம் செல்வதா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். ஏனெனில் அதற்குப் பதிலாக பல்வேறு மாற்றீடுகள் உள்ளன. களப்பயணம் செல்வதற்குத் தீர்மானித்தால் எங்கு செல்வது, எவற்றைப் பார்ப்பது என்பவற்றையும் தீர்மானிக்க வேண்டும். எனினும் பின்னர் களப்பயணம் சென்றதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டதா என்பதை மதிப்பிடவேண்டும். அப்போது தான் அவரது தீர்மானத்தின் விளைதிறனை கணிக்க முடியும்.

உருவம்: 1 கோட்பாட்டு ரீதியான தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறை




உண்மையில் இவ்வாறு தான் நாம் அனைவரும் தீர்மானங்களை மேற்கொள்கின்றோமா? இது ஒரு கோட்பாட்டு ரீதியான விளக்கமே. நடைமுறையில் மக்கள் தீர்மானங்களை பல்வேறு முறைகளில் மேற்கொள்கிறார்கள். இதைப் பற்றி பின்னர் நோக்குவோம்.

### தீர்மானங்களின் வகைகள்

தீர்மானங்கள் பல்வேறு மட்டங்களில், பல்வேறு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றின் இயல்புக்கு ஏற்ப தீர்மானங்கள் நாளாந்த தீர்மானங்கள் (Routine decisions) அடிப்படைத் தீர்மானங்கள் (Basic decisions) எனப்படுகின்றன. நாளாந்த தீர்மானங்கள் திரும்பவும் திரும்பவும் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றினால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் வழமையானவை. இவ்வாறான தீர்மானங்களை மேற்கொள்ள நாம் அவ்வளவாக சிந்திப்பதுமில்லை. உதாரணமாக ஒரு மாணவன் வகுப்புக்கு பிந்தி வரும்போது என்ன செய்யவேண்டும் என்பதில் ஆசிரியர் அவ்வளவாக கவனம் செலுத்துவதில்லை. ஆனால் மாணவர்களைக் களப்பயணம் கூட்டிச் செல்லுதல் என்பது அடிப்படைத் தீர்மானமாகும். இவ்விடயத்தில் ஆசிரியரின் தீர்மானங்கள் மாணவர்களை மட்டுமல்லாது பாடசாலையையும் அவரது தொழிலையும் கூட பாதிக்கக்கூடியவை. அத்துடன் இதற்கான மாற்றீடுகளும் நிறைய உள்ளன. தீர்மானம் தொடர்பான மாற்றீடுகள் அதிகரிக்கும் போது தீர்மானம் மேற்கொள்வதும் சிக்கலான விடயமாகிவிடும். ஆசிரியரின் தொழில்சார் அந்தஸ்தும், மட்டமும் அதிகரிக்கும்போது அவர் அடிப்படைத் தீர்மானங்கள் மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களும் அதிகரிக்கின்றன. பாட ஆசிரியரை விட வகுப்பாசிரியரும், அவரை விட பாட இணைப்பாளர் அல்லது பிரிவுத்தலைவராக செயற்படும் ஆசிரியரும் இணைப்பாளர் அல்லது பிரிவுத்தலைவராக செயற்படும் ஆசிரியரும் அடிப்படைத் தீர்மானங்கள் எடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் அதிகமாகும்.

இன்னுமொரு வகையில் தீர்மானங்களை தனிப்பட்ட தீர்மானங்கள் (Personal decisions), நிறுவனத் தீர்மானங்கள் (Organizational decisions) எனவும் பாகுபடுத்தலாம். எப்போது லீவு எடுத்துக்கொள்ளுதல் அல்லது என்ன விதமாக உடை உடுத்துதல் போன்றவை ஓர் ஆசிரியரின் தனிப்பட்ட தீர்மானங்களாகும். ஆனால் அவையும் மறைமுகமாக பாடசாலையை பாதிக்கும். எனினும் அவர் எடுக்கும் நிறுவனத் தீர்மானங்கள் உதாரணமாக தமது மாணவர்களை ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் நேரடியாக பங்குபெறச் செய்தல் போன்றவை பாடசாலைக்கு நேரடியான தாக்கங்களை கொண்டுவரக்கூடியன. இவ்வாறான நிறுவனத் தீர்மானங்கள் மேற்கொள்வதில் ஆசிரியரின் அறிவுத்திறன் மட்டுமல்லாது அவரது அனுபவமும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

தீர்மானங்களை வகைப்படுத்துவதில் ஹேபார்ட் சைமனின் (**Herbert Simon, 1977**) வகைப்படுத்துகை மிகவும் பிரபலமானது. அவர் தீர்மானங்களை நிரற்படுத்தப்பட்ட தீர்மானங்கள் (கட்டமைக்கப்பட்ட) (**Programmed decisions**) நிரற்படுத்தப்படா தீர்மானங்கள் (கட்டமைக்கப்படா) (**Non - Programmed decisions**) என வகைப்படுத்தியுள்ளார். வழமையான, திரும்பத் திரும்ப மேற்கொள்ளப்படுகின்றவை நிரற்படுத்தப்பட்ட தீர்மானங்கள்; வழமைக்கு மாறான தனித்துவமான சந்தர்ப்பங்களில் நிரற்படுத்தப்படா தீர்மானங்களை நாம் மேற்கொள்கிறோம். இவ்விரண்டு வகைப்பட்ட தீர்மானங்களின் இயல்புகளையும் அட்டவணை1 விளக்குகிறது:

**அட்டவணை 1**
**நிரற்படுத்தப்பட்ட, நிரற்படுத்தப்படாத தீர்மானங்களின் இயல்புகள்**

| நிரற்படுத்தப்பட்ட தீர்மானங்கள் | நிரற்படுத்தப்படாத தீர்மானங்கள் |
|---|---|
| * வழமையானவை; நாளாந்தம் எடுக்கப்படுபவை | தனித்துவமானவை; புதிது புதிதானவை |
| * பழக்கம், விதிகள், நடைமுறைகளின் அடிப்படையில் தீர்வுகள் வழங்கப்படும் | தீர்ப்புவழங்குவதற்கான கொள்கைகளோ, நடைமுறைகளோ இல்லை; ஒவ்வொரு பிரச்சினையும் சந்தர்ப்பமும் வேறுபட்டவை. |
| * நிச்சயத்தன்மை (Certainty) கூடியவை | நிச்சயத்தன்மை மிகவும் குறைவு. |
| * கீழ் மட்டத்தில் மேற்கொள்ளப்படுபன | மேற் மட்டத்தில் உள்ளவர்களின் பொறுப்பு |

மாணவரது பயிற்சிக் கொப்பியினை எவ்வாறு, எப்போது திருத்துவது என்பதோ பரீட்சைப் புள்ளிகளை எப்போது வழங்குவது என்பதோ நிரற்படுத்தப்பட்ட தீர்மானங்களாகும். ஆனால் படிப்பில் ஆர்வம் காட்டாது வகுப்பறையில் பிரச்சினை கொடுத்துக் கொண்டிருக்கும் ஒரு மாணவன் தொடர்பாக ஆசிரியர் எடுக்க வேண்டிய தீர்மானங்கள் நிரற்படுத்தப்படாதவை. அவ்வாறான சந்தர்ப்பங்களில் தீர்மானம் மேற்கொள்ளும்போது ஆசிரியர் தமது புத்தகத் திறனையும் பாடப்புத்தகத்திறனையும் வெளிப்படுத்தவேண்டும்.

தீர்மானங்களை பாகுபடுத்தும் வேறு பல முறைகளும் உள்ளன. அவசரகாலத் தீர்மானங்கள், வெளிப்படையான தீர்மானங்கள், வழமையான தீர்மானங்கள், தருணத்துக்குரிய தீர்மானங்கள் எனவும் தீர்மானங்களைப் பாகுபடுத்த முடியும்.

*தீர்மானங்களை வகைப்படுத்துவதில் ஹேபார்ட் சைமனின் (Herbert Simon, 1977) வகைப்படுத்துகை மிகவும் பிரபலமானது. அவர் தீர்மானங்களை நிரற்படுத்தப்பட்ட தீர்மானங்கள் (கட்டமைக்கப்பட்ட) (Programmed decisions) நிரற்படுத்தப்படா தீர்மானங்கள் (கட்டமைக்கப்படா) (Non - Programmed decisions) என வகைப்படுத்தியுள்ளார். வழமையான, திரும்பத் திரும்ப மேற்கொள்ளப்படுகின்றவை நிரற்படுத்தப்பட்ட தீர்மானங்கள். வழமைக்கு மாறான தனித்துவமான சந்தர்ப்பங்களில் நிரற்படுத்தப்படா தீர்மானங்களை நாம் மேற்கொள் — கிறோம்.*

## தீர்மானம் மேற்கொள்ளல்: இரு அணுகுமுறைகள்

முகாமைத்துவப்புலத்தில் தீர்மானம் மேற்கொள்ளலில் கோட்பாட்டு ரீதியாக இரண்டு அணுகுமுறைகள் அல்லது மாதிரி கைகள் (Models) உள்ளன: (i) செம்மையான மாதிரிகை (Classical model of decision making அல்லது Rational economic model) (ii) நடத்தை சார்ந்த மாதிரிகை (Behavioural model of decision making அல்லது Administrative model)

### (1) செம்மையான மாதிரிகை

பகுத்தறிவு சார்ந்த பொருளாதார மாதிரிகை எனவும் கூறப்படுகிறது. அதாவது தீர்மானங்கள் எப்போதும் "தர்க்கரீதியாகவும் பகுத்தறிவாகவும் மனவெழுச்சிகளைத் தவிர்த்தும்" மேற்கொள்ளப்படுகின்றன. தீர்மானம் மேற்கொள்பவர் தனது உணர்ச்சி நிலைகளை கடந்து புறவயமான நிலையிலிருந்து கொண்டு செயற்படுகின்றார் என்பது இதன் பொருளாகும்.

மனிதன் பகுத்தறிவு மிக்க ஒரு பொருளாதார உயிரி என்னும் வாதமே இந்த மாதிரிகையின் தளமாகும். பல்வேறு மாற்றீடுகளையும் தேடி, மதிப்பீடு செய்து தனக்கு உச்ச அளவான அநுகூலம் தரத்தக்க மாற்றீடு ஒன்றினையே ஒரு நபர் தெரிவு செய்வார் என இம் மாதிரிகை கூறுகிறது. இவ்வாறான செயற்பாடு பின்வரும் எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டது:

அ) தீர்மானம் மேற்கொள்ளல் ஓர் இலக்கை அடிப்படையாகக் கொண்ட செயன்முறையாகும்

ஆ) சகல மாற்றீடு களையும் அறிந்திருப்பதோடு ஒவ்வொரு மாற்றீட்டைப் பற்றியும் முழுமையான தகவல்களையும் அறிந்திருக்கவேண்டும்.

பகுத்தறிவு சார்ந்த, அளவு ரீதியான பிரச்சினை தீர்க்கும் முறையினைக் கையாண்டு தீர்மானங்கள் மேற்கொள்வது எப்போதும் சாத்தியமானதல்ல. மானிட அம்சங்களைக் கருத்தில் கொண்டு அளவுசார்ந்த மற்றும் பண்பு சார்ந்த மாறிகளை உள்ளீடாகக் கொண்டு தீர்மானங்களை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பதை சுட்டிக்காட்டுகின்ற யதார்த்தமான கோட்பாடு தான் எமக்கு மிகவும் பயனளிக்கக்கூடியது. இந்த அடிப்படையில் பார்க்கும்போது நடத்தை சார்ந்த மாதிரிகை யதார்த்தமானதாக தோன்றுகிறது.

இ) நிச்சயமற்ற அம்சங்கள் யாவும் அகற்றப்பட்டிருக்க வேண்டும்.

ஈ) ஒவ்வொரு மாற்றீடும் பகுத்தறிவுடனுடம் தர்க்கரீதியாகவும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

இம்மாதிரிகை எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு நபர் எவ்வாறு தீர்மானம் மேற்கொள்ள வேண்டும் என்னும் நியமங்களை முன்வைக்கின்ற (Prescriptive model) மாதிரிகையாகும். நடைமுறையில் இவ்வாறு பகுத்தறிவு ரீதியாக தீர்மானம் மேற்கொள்வதில் பல வரையறைகள் உள்ளன:

அ) பிரச்சினையின் எல்லா அம்சங்களையும் ஒருவர் அச்சொட்டாக விளங்கிக் கொள்ள முடியாது.

ஆ) மாற்றீடுகள் அனைத்தையும் தெரிந்து கொள்வதும் அவை ஒவ்வொன்றைப் பற்றியும் பூரணமான தகவல்களைக் கொண்டிருப்பதும் சாத்தியமானதல்ல.

இ) மாற்றீடுகளை மதிப்பீடு செய்வதற்கான நேரமும் ஏனைய வளங்களும் மட்டுப்படுத்தப்பட்டவை.

ஈ) ஒவ்வொருவரதும் அறிகைத்திறன் (Cognitive ability) வரையறைகளைக்கொண்டது.

உ) தீர்மானம் மேற்கொள்வதில் அரசியல் அம்சங்களும் உள்ளன.

எனவே மேற்படி வரையறைகளின் அடிப்படையில் நோக்கும் போது இம்மாதிரிகை குறைபாடான எல்லா சந்தர்ப்பங்களிலும் இவ்வாறுதான் நடைமுறையில் தீர்மானங்களை மேற்கொள்கின்றார்கள் எனக் கூறுவதற்கு இல்லை. இம்மாதிரிகை "எவ்வாறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவேண்டும்" என்று கட்டுறுத்துகிறது. நடைமுறை உலகம் மிகவும் சிக்கலானது. எனவே பகுத்தறிவு சார்ந்த, அளவு ரீதியான பிரச்சினை தீர்க்கும் முறையினைக் கையாண்டு தீர்மானங்கள் மேற்கொள்வது எப்போதும் சாத்தியமானதல்ல. மானிட அம்சங்களைக் கருத்தில் கொண்டு அளவுசார்ந்த மற்றும் பண்பு சார்ந்த மாறிகளை உள்ளீடாகக் கொண்டு தீர்மானங்களை எவ்வாறு மேற் கொள்ள முடியும் என்பதை சுட்டிக் காட்டுகின்ற யதார்த்தமான கோட்பாடு தான் எமக்கு மிகவும் பயனளிக்கக்கூடியது. இந்த அடிப்படையில் பார்க்கும்போது நடத்தை சார்ந்த மாதிரிகை யதார்த்தமானதாக தோன்றுகிறது.

### (2) நடத்தை சார்ந்த மாதிரிகை

ஹேர்பர்ட் சைமன் என்பார் நோபல் பரிசினை வென்ற பொருளியலாளர். தீர்மானங்கள் "எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும்" என்பதை விடுத்து யதார்த்தமான உலகில் மக்கள் "எவ்வாறு தீர்மானங்களை மேற்கொள்கின்றனர்" என்பதை அவர் ஆய்வு செய்தார். அவரது கருத்துக்களே இன்று தீர்மானங்கள் மேற்கொள்ளலில் நிர்வாக மாதிரிகை **(Administrative model)** க்கு அடிப்படையாக அமைந்தன. சைமனின் கருத்துப்படி மக்கள் பெரும்பாலும் பின்வரும் அடிப்படைகளிலேயே தீர்மானங்களை மேற்கொள்ளுகின்றனர்:

i) பூரணமற்ற தகவல்கள் (Imperfect information)

ii) மட்டுப்படுத்தப்பட்ட பகுத்தறிவு (bounded rationality)

iii) குறைந்த பட்ச திருப்தி (Satisfieing)

பல்வேறு மாற்றீடுகளிலிருந்து மிகச் சிறந்த மாற்றீடு ஒன்றினை தெரிவு செய்ய வேண்டுமெனில் ஒவ்வொரு மாற்றீடு பற்றியும் பூரணமான தகவல்கள் திரட்டப்படவேண்டும். இது நடைமுறையில் சாத்தியமில்லை என ஒரு தீர்மானம் மேற்கொள்வதற்காக, நாம் சகல மாற்றீடுகளையும் தேடி அறிய முயல்வதில்லை. எமக்கு கிடைக்கக்கூடிய தகவல்கள் பூரணமானவை அல்ல என்பதைத் தெரிந்து கொணடு தான் நாம் ஒரு மாற்றீடை தெரிவு செய்கிறோம். அதேபோல மனிதனுடைய பகுத்தறிவு என்பது அவனது விழுமியங்கள், பழக்கவழக்கங்கள், திறன்கள், மறிவினைகள் (reflexes) போன்றவற்றினால் மட்டுப்படுத்தப்படுகிறது. முற்றிலும் புறவயமான, விஞ்ஞான பூர்வமான அறிவுநிலையில் நின்று சாதாரண மனிதர்கள் தீர்மானங்கள் மேற்கொள்வதில்லை. அது-

மாத்திரமன்றி குறைந்தபட்ச திருப்தி ஏற்படும் பட்சத்தில் அந்த மட்டத்திலேயே தீர்மானங்களை மேற்கொள்கின்றான்.

ஒரு எளிய உதாரணத்தின் மூலம் நடத்தைசார்ந்த தீர்மானம் மேற்கொள்ளும் இந்த மாதிரிகையை விளக்க முடியும். திரு. சுந்தரம் தனது மனைவியின் பிறந்த நாளுக்கு பரிசளிப்பதற்காக ஒரு சாரி வாங்குவதற்கு புறக்கோட்டை பிரதான வீதிக்கு செல்கிறார் எனக் கொள்வோம். பிரதான வீதியிலும், குறுக்கு வீதிகளிலும் நூற்றுக்கணக்கான கடைகள் உள்ளன. சகல கடைகளுக்கும் சென்று அங்குள்ள சகல சாரிகளையுதம் மதிப்பிட்டு அவர் தனக்கு ஒரு விருப்பமான சாரியை தெரிவு செய்யப் போவதில்லை. மாறாக அவர் ஒரு சில கடைகளுக்கு மாத்திரமே செல்வார். அங்கும் கூட அக்கடைகளிலுள்ள சகல சாரிகளையும் அவர் புரட்டிப்பார்க்கப் போவதில்லை. சாரிகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அலுமாரிகளை அவர் நோட்டம் விடுவார். சில சாரிகளை வெளியில் எடுக்குமாறு கேட்பார். அவற்றில் ஒரு சிலவற்றை மாத்திரமே புரட்டிப் பார்ப்பார். ஒன்றிரண்டு சாரிவிளை விரித்துப் பார்ப்பார். இறுதியில் ஒன்றை தெரிவு செய்வார். அதைத் தெரிவு செய்ததில் அவரது புறவயமான பகுத்தறிவை விட அவரது அகவமான அம்சங்களே செல்வாக்கு செலுத்தியிருக்கும்.

ஆக, பெரும்பாலான மனிதர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் "இவ்வாறாகவே தீர்மானங்களை மேற்கொள்கின்றனர். இதன் காரணமாகவே நாம் தவறான தீர்மானங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளும் அதிகமாக உள்ளன. ஆசிரியர்கள் தீர்மானங்களை மேற்கொள்கின்றபோது தாம் தவறான தீர்மானங்களை எடுக்கின்ற வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன என்பதை பிரக்ஞைபூர்வமாக விளங்கியிருத்தல் வேண்டும்.

## குழுவாக தீர்மானம் மேற்கொள்ளல்

குடும்பங்களிலும், நிறுவனங்களிலும் வழமையாக குழுத்தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பாடசாலைகளில் பொதுவான நிகழ்வுகள் குறித்து குழுநிலையிலேயே தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. உயர் முகாமைத்துவக் குழு, ஆசிரியர் கூட்டம், பகுதித் தலைவர்கள் கூட்டம், பாட இணைப்பாளர்கள் கூட்டம் போன்றவை குழுவாகத் தீர்மானம் மேற்கொள்ளும் தளங்களாக உள்ளன.

குழுவாகத் தீர்மானம் மேற்கொள்வதில் அனுகூலங்களும் பிரதி கூலங்களும் ஒருங்கே காணப்படுகின்றன. குழுவின் உறுப்பினர்களின் வேறுபட்ட அறிவு நிலை, அனுபவங்கள், கருத்தோட்டங்கள் ஆகியவற்றைக் கொண்டிருப்பர். அதே நேரம் பிரச்சினையின் பல்வேறு பரிமாணங்கள் பற்றிய வேறுபட்ட கருத்து நிலைகள் முன் வைக்கப்படும். பிரச்சினை பற்றிய தகவல்களும் நிறையவே காணப்படும். இதனால் மாற்றீடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். கூடிய தொடர்பாடல் இருப்பதோடு எடுக்கப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அர்ப்பணிப்பும் அதிகமாகவே இருக்கும்.

இவ்வாறான காரணங்களால் தனிப்பட்ட நபர்கள் மேற்கொள்ளும் தீர்மானங்களில் பிரதிகூலங்களும் இருக்கவே செய்கின்றன. எல்லாரும் தமது கருத்துக்களை முன்வைப்பதால் தீர்மானம் எட்டப்படுவதற்கு கூடிய நேரம் செவழிக்கப்படும். சிலவேளை கருத்தொருமிப்பு ஏற்படாமல் தீர்மானம் எட்டப்படாமலேயே போய்விடலாம். அத்துடன் குழுநிலை விவாதத்தில் ஒரு சிலர் தமது ஆளுமை காரணமாக தமது கருத்துகளை திணிக்கும் நிலையும் காணப்படும். இதனால் எடுக்கப்படும் தீர்மானம் குழுவினது தீர்மானமாக இல்லாமல் மேலாண்மை கொண்ட நபர்களின் தீர்மானமாகவே அமைந்து விடும். இவை எல்லாவற்றையும் விட " குழுச்சிந்தனை" (Group think) என்பது மிகவும் முக்கியமான முறையாக அமையும். அதாவது குழுவின் ஒருமைப்பாட்டைப் பேணுவதற்காகவும் பிணக்குகளை தவிர்ப்பதற்காகவும் குழு உறுப்பினர்கள் தமது விருப்பமின்மையினை வெளிப்படுத்தத்தயங்குவர். இதனால் குறைபாடுகள், பலவீனங்கள் நன்கு ஆராயப்படாமலேயே தீர்மானம் மேற்கொள்ளும் ஆபத்து ஏற்படுகிறது. இது தீர்மானத்தின் தரத்தை வெகுவாகப் பாதிக்கும்.

## முடிவுரை

தீர்மானங்கள் மேற்கொள்ளுதல் என்பது தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் செயற்பாடுகளில் ஒன்றிணைக்கப்பட்ட அம்சமாகும். நாளாந்தம் நாம் பல்வேறு தீர்மானங்களை மேற்கொள்கிறோம். இவற்றில் பல நாம் திரும்பத்திரும்ப மேற்கொள்கின்ற தீர்மானங்களையும், ஒரு சில கட்டமைக்கப்படாத தனித்துவமான, சிக்கலான சந்தர்ப்பங்களில் மேற்கொள்கின்ற தீர்மானங்களாகவும் அமைகின்றன. தீர்மானம் மேற்கொள்ளல் தொடர்பாக செய்யப்பட்ட ஆய்வுகள் இரண்டு மாதிரிகைகளை முன்வைக்கின்றன. இவற்றில் ஒன்று எவ்வாறு தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என்னும் நியமங்களை முன் வைக்கிறது. மற்றது தீர்மானங்கள் உண்மையில் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றன என்பதை விளக்குகின்றது. பல சந்தர்ப்பங்களில் நாம் தனியாக மேற்கொள்ளும்- தீர்மானங்களைவிட குழுவாகச் சேர்ந்து எடுக்கும் தீர்மானங்கள் சிறப்பானவைகளாக அமைகின்றன. தீர்மானம் எடுத்தல் தொடர்பான தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளுதல் விளைதிறன் மிக்கதாக தனது பணியினை மேற்கொள்ள ஓர் ஆசிரியருக்கு மிகவும் முக்கியமானதாகும். ❑

# எண்ணக்கரு வரைபடம் :
# வினைத்திறனான கணிப்பீட்டுக் கருவி

## அறிமுகம்

பாடசாலை மட்ட கணிப்பீட்டுச் செயற்பாட்டினை நடைமுறைப்படுத்தலில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள், சவால்கள் காலத்திற்குக் காலம் மேற் கொள்ளப்பட்டு வரும் ஆய்வுகளின் ஊடாக இனங்காணப்படுவதுடன் கணிப்பீட்டுத் திட்டத்தின் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டு அவற்றிற்கான தீர்வுகள் புது மெருகூட்டப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் பாடசாலை கற்றல் - கற்பித்தல் செயன்முறையை வினைத்திறனாக மாற்றி கல்வித்தரத்தினை மேம்படுத்துவதன் மூலம் மாணவர்கள் ஒவ்வொருவரும் சமநிலை ஆளுமைப் பண்புடையவராக மிளிர வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கற்போனைச் செயற்படு நிலைக்கு இட்டுச் சென்று, நீண்டு நிலைத்து நிற்கக் கூடிய கருத்துள்ள கண்டறி முறைக் கற்றலே வினைத்திறனான கற்றலாகும். கோலங்களை அவதானித்தல், எதிர்வு கூறுதல், பிரச்சினைகளை விடுவித்தல், தொடர்புகளை உருவாக்குதல் போன்ற உளச் செயற்பாடுகள் இக்கற்றல் மூலம் இடம் பெறும். இவ்வுளச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு கட்டுருவாக்கவாக் கற்றல் அணுகு முறையில் ***(Constructivist Learning Approach)*** எண்ணக்கரு வரைபட நுட்பமுறை ஒரு உத்தியாகப் பயன்படுகின்றது.

## கணிப்பீட்டு முறைகள்.

மாணவர்கள் ஒவ்வொருவரினதும் சமநிலை ஆளுமைப் பண்புகள் விருத்தி செய்ய வேண்டுமாயின் அவர்கள் ஒவ்வொருவரினதும் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றின் ஒன்றிணைப்பான தேர்ச்சியை விருத்தி செய்ய வேண்டும். இத்தேர்ச்சிகள் நியதிகளின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றது. (SBA / RD / 2003 / 06) எனவே கோட்பாட்டு விடயங்களையும் செயன் முறையாகக் கற்பதற்கு இட மேற்படுத்தி ஒவ்வொரு மாணவரும் வெளிப்படுத்தும் தேர்ச்சிகளை நியதிகளின் அடிப்படையில் கணிப்பீடு செய்து எதிர்பார்க்கப்பட்ட தேர்ச்சித் திறன்களை வெளிக்கொணர முடியும்.


**க. பாஸ்கரன்**
ஆசிரிய கல்வியியலாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி. யாழ்ப்பாணம்


கருத்துள்ள கற்றல் நிகழும் போது எமது முழு அறிகை அமைப்புக்குள்ளும் தொடரான மாற்றங்கள் உருவாக்கப்படும். ஏற்கெனவே உள்ள தவறான எண்ணக் கருக்களுக்கிடையே புதிய தொடர்புகள் உருவாக்கப்படும். இதன் காரணமாக தற்போது அதி உயர் உள ஆற்றல்களை விருத்தி செய்ய முடியும். இவ்வுயர் உள ஆற்றல்கள் சமநிலை ஆளுமைப் பண்பு விருத்திக்கு அத்திவாரமாக அமையும்.

கற்போனைச் செயற்படு நிலைக்கு இட்டுச் சென்று, நீண்டு நிலைத்து நிற்கக் கூடிய கருத்துள்ள கண்டறிமுறைக் கற்றலே வினைத்திறனான கற்றலாகும். கோலங்களை அவதானித்தல், எதிர்வு கூறுதல், பிரச்சினைகளை விடுவித்தல், தொடர்புகளை உருவாக்குதல் போன்ற உளச் செயற்பாடுகள் இக்கற்றல் மூலம் இடம் பெறும். இவ்வுளச் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு கட்டுருவாக்கவாத கற்றல் அணுகு முறையில் **(Constructivist Learning Approach)** எண்ணக்கரு வரைபட நுட்பமுறை ஒரு உத்தியாகப் பயன்படுகின்றது.

குறித்தவொரு பாடத்தினது அல்லது விடயத்தினது அறிகை அமைப்பினை இரு பரிமாண வடிவில் பிரதிபலிப்பதற்கு எண்ணக்கரு வரைபடம் சிறந்த உத்தியாகும்.

எண்ணக்கரு வரைபடமானது வரிவடிவமைப்பானது பிரேரணைக்

கூற்றுக்களால் (இணைப்புச் சொற்கள்) (Propositions) எண்ணக்கருக்களுக்கிடையேயான கருத்துள்ள தொடர்புகளைக் கொண்டு அமைந்திருக்கும். பிரேரணைக் கூற்றுக்கள் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட எண்ணக்கருக்களுக்கிடையேயான இணைப்பினை விபரிக்கின்ற அல்லது தொடர்புகள் தொடர்பான தகவல்களை வழங்குகின்ற சொற்களினால் அல்லது வசனத்தினால் தொடர்புபடுத்தப்படும்.

பல்வேறு தகவல் ஆதாரங்களில் இருந்து பெறப்படும் தகவல்களை மிகவும் சுருக்கமான முறையில் தொகுத்து வழங்குவதற்கும், பாடம் தொடர்பான சிக்கலான பிரச்சினை ஒன்றை விளங்கிக் கொள்வதற்கும், பாடம் தொடர்பான சகல வித அம்சங்களையும் உள்ளடக்கிய விதமாக தகவல்களைக் காட்சிப்படுத்தவும் எண்ணக்கரு வரைபட நுட்பமுறை பயன்படுத்தப்படுகின்றது. மேலும் குறிப்பிட்ட விடயம் தொடர்பான சகல தகவல்களையும் ஒரே பார்வையில் மனக்கண் முன்னிறுத்தி ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்கும் இந்நுட்பமுறை மிகவும் சிறந்தது.

ஆசிரியர் தனது கற்பித்தல் செயற்பாட்டின் போது எண்ணக்கரு வரை பட நுட்பத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயன்முறை மிகவும் வினைத்திறனுள்ளதாக அமைக்க முடியும். கற்பித்தல் முன் திட்டமிடலின் போது சிக்கலான / கடினமான எண்ணக்கருக்களை இனங்காண்பதோடு அவற்றினைப் பற்றிய தெளிவான விளக்கத்தினையும் பெற்றுக் கொள்ள முடிவதோடு, எண்ணக்கருக்களை ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தெளிவான விளக்கத்துடன் மாணவர்கட்கு வழங்கவும் முடியும்.

ஆசிரியர் தனது. கற்பித்தல் செயற்பாட்டின் போது எண்ணக்கரு வரை பட நுட்பத்தினைப் பயன் படுத்துவதன் மூலம் கற்றல் — கற்பித்தல் செயன்முறை மிகவும் வினைத் திறனுள்ளதாக அமைக்க முடியும். கற்பித்தல் முன் திட்டமிடலின் போது சிக்கலான / கடினமான எண்ணக் கருக்களை இனங்காண்பதோடு அவற்றினைப் பற்றிய தெளிவான விளக்கத்தினையும் பெற்றுக் கொள்ள முடிவதோடு. எண்ணக்கருக்களை ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தெளிவான விளக்கத்துடன் மாணவர் கட்கு வழங்கவும் முடியும்.

மேலும் எண்ணக்கருக்கள் எண்ணக் கருக்களுக்கிடையேயான தெளிவான தொடர்புகள் என்பவற்றையும் ஆசிரியர் பூரணமாக விளங்கிக் கொள்ள முடியும். இவற்றின் ஊடாக மாணவர்களை மதிப்பீடு செய்யவும் பின்னூட்டல் வழங்கவும் மாணவர்களது அடைவு மட்டத்தினைப் பரீட்சிக்கவும் எண்ணக்கரு வரைபட முறை மிகவும் பயனுள்ளதாக அமையும்.

## எண்ணக்கரு வரைபடம் அமைப்பதற்கான படிமுறைகள்

எண்ணக்கருவரைபடம் ஒன்றினை அமைக்கும் போது பின்வரும் படிமுறைகளைக் கருத்தில் கொள்வது நன்று

*** சாராம்சத்தினை தெரிவு செய்தல்**

எண்ணக்கரு வரைபடம் அமைப்பதற்கான சாராம்சம் / விடயத்தினை தெரிவு செய்தல் முக்கியமானது. இங்கு சாராம்சம் விடயம் தொடர்பான முக்கிய சொற்கள் / எண்ணக்கருக்களை தெரிவு செய்தல் இடம் பெறும்.

*** எண்ணக்கருக்களை இனங்காணுதலும் ஒழுங்குபடுத்தலும்**

விடயம் / சாராம்சம் தொடர்பான இடைத்தர குறிப்பான எண்ணக் கருக்களை இனங்கண்டு வரிசைப்படுத்தும் முறையில் இடம் பெறும்.

*** எண்ணக்கருக்களைக் கூட்டமாக்குதல்**

ஒரே தன்மையான அல்லது செயற்பாடுகளைக் கொண்ட எண்ணக்கருக்களை ஒரு கூட்டமாகவும் மிகவும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டமைந்த எண்ணக் கருக்களைப் பிறிதொரு கூட்டமாகவும் ஒழுங்கமைத்தல்

*** எண்ணக்கருக்களைக் காட்சிப்படுத்தல்**

எண்ணக்கருக்களை வரி வடிவ ஒழுங்கமைப்பில் காட்சிப்படுத்துவதற்கான செயற்பாடுகள் இங்கு இடம் பெறும்.

*** எண்ணக் கருக்களை இணைக்கும் சொற்கள் (Linking words) கொண்டு இணைத்தல்**

தொடர்புபட்ட எண்ணக்கருக்களுக்கிடையே அம்புக் குறியிடப்பட்ட கோடுகள் வரைதல். அத்தொடர்புகள் எவ்வகையானது, எத் தன்மையானது என்பதனை "இணைக்கும் சொற்களால்" குறித்துக் காட்டுதல்

*** எண்ணக்கரு வரை படத்தினை மீளாய்வு செய்தல்**

எண்ணக்கரு வரைபடம் அமைக்கும் போது ஏற்படும் தெளிவு, விளக்கம் காரணமாக மேலதிக எண்ணக்கருக்கள் தொடர்புகள் வெளிக் கொணரப்படும். அதன் காரணமாக எண்ணக்கரு வரைபடத்தினை மீளாய்வு செய்து மிகவும் வினைத்திறனான எண்ணக்கரு வரைபடத்தினை அமைத்தல்.

## எண்ணக்கரு வரைபட மாதிரிகள்

மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடும் போது ஆசிரியர்கள், மாணவர்கட்கு வழிகாட்டியாகத் தொழிற்பட்டு எண்ணக்கரு வரை படங்களை மேற்கூறிய படிமுறைகளுக்கூடாக வரைவதற்கு நெறிப்படுத்த வேண்டும்.

எண்ணக்கரு வரைபடங்கள் வரைவதற்கான உதாரணங்களைச் சற்று நோக்குவோம்.

**உதாரணம் 1**

"தாவரங்களில் உணவு" எனும் விடயத்தினை எடுத்துக் கொள்வோம் இவ் விடயத்தோடு தொடர்புடைய எண்ணக் கருக்களைப் பட்டியல்படுத்துவோம். அவையாவன தாவரங்கள், பூ இதழ்கள், நிறங்கள், வளர்ச்சி பச்சை நிறப் பூக்கள், வேர்கள், தண்டுகள், இலைகள், விதைகள் உணவு என்பன சிலவாகும். இவ் எண்ணக்கருக்களை வரை படத்தில் (வரை படம்1) குறித்துக் காட்டுவோம்.



எண்ணக்கரு வரைபடம் I - தாவரங்களின் உணவு

**உதாரணம் 2**

ஒளித்தொகுப்பு எனும் விடயம் தொடர்பாக வரையப்பட்டுள்ள எண்ணக்கரு வரைபடத்தினை (வரை படம்2) நோக்குவோம்.

தரப்பட்ட இரு உதாரணங்களில் இருந்தும் எண்ணக்கரு வரைபடம் ஒன்றினை அமைக்க முடியும் என அறிந்து கொள்ளலாம். தனியாள் ஒவ்வொருவரினதும் உள ஆற்றல்களுக்கு ஏற்பவும் குறித்த விடயம் தொடர்பாகவும் எந்தளவிற்கு விடயங்கள் அல்லது எண்ணக்கருக்கள் அவற்றுக்கிடையேயான இணைப்புச் சொற்கள் என்பன வேறுபட்டுக் காணப்படுவதன் காரணமாக எண்ணக்கரு வரைபடத்தின் அமைப்பு அமையும்.

## எண்ணக்கரு வரைபடம் கணிப்பீட்டுக்கருவி

எண்ணக்கரு வரைபட நுட்பத்திறனைத் தனியாள் கணிப்பீட்டுக் கருவியாகவோ அல்லது குழு ரீதியான



எண்ணக்கருவரைபடம் II ஒளித்தொகுப்பு

கணிப்பீட்டுக் கருவியாகவோ பயன்படுத்த முடியும். இக்கணிப்பீட்டுக் கருவி மூலம் தனியாள் ஒருவரினது விடயம் தொடர்பான அறிவு மற்றும் உள ஆற்றல்களை கணிப்பிட முடியும். மேலும் குழு நிலையில் குழுயும் அங்கத்தவர்களது உள ஆற்றல்கள் ஆளுமைப் பண்புகள், சமுகத் திறன்கள் போன்ற அம்சங்களையும் கணிப்பிடமுடியும். கணிப்பீட்டின் போதும் பின்வரும் நியதிகளைக் கொண்டதாக கருவி அமைக்கப்படுதல் சிறந்த கணிப்பீட்டுக் கருவியாக எண்ணக்கருவரைபடத்தினைப் பயன்படுத்துவதற்கு வழியமைத்துக் கொடுக்கும் எனலாம்.

1) விடயம் / பாட அலகு தொடர்பான எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்ளல்

2) எண்ணக்கருக்களின் விரிவாக்கம் பற்றி அறிந்து கொள்ளல்

3) எண்ணக்கருக்களை ஒழுங்கமைத்து பத்திரத்தில் குறித்து கொள்ளுதல்

4) எண்ணக்கருக்களுக்கிடையே இணைக்கும் சொற்களை சரியான தொடர்புகள் / சொற்கள் மூலம் குறித்துக் காட்டுதல்.

5) பூரணப்படுத்தப்பட்ட எண்ணக்கரு வரை படத்தின் அமைப்பும் அதன் தன்மையையும் அறிதல்

6) தனியாளின் ஆளுமைப் பண்புகள் மற்றும் சிறப்பார்ந்த தன்மைகள்

மேற் கூறப்பட்ட நியதிகள் தனிநபர் கணிப்பீடுகளுக்கும் பயன்படுத்தப்படும் அதேவேளை குழு ரீதியாக எண்ணக்கரு வரைபட நுட்பத்தினைக் கணிப்பீட்டுக் கருவியாகப் பயன்படுத்தும் போது மேற்கூறப்பட்ட நியதிகட்கு மேலதிகமாக சமூகத்திறன்கள், ஆளுமைப் பண்புகள் போன்ற விடயங்களையும் கணிப்பிட முடியும்.

எண்ணக் கரு வரைபடத்தினை கணிப்பீட்டுக் கருவியாக பயன்படுத்தும் போது பிரதான எண்ணக்கருக்கள், உப எண்ணக்கருக்கள், குறிப்பான எண்ணக்கருக்கள் என இனம் கண்டு புள்ளிகள் வழங்குதல், எண்ணக்கருக்களுக்கிடையேயான குறுக்கிணைப்புக்களின் எண்ணிக்கைகள் இனம் கண்டு புள்ளி வழங்குதல் போன்ற விடயங்களையும் கருத்தில் கொள்ள முடியும். பிரதான எண்ணக்கருக்க்கள், உப எண்ணக்கருக்கள், குறிப்பான எண்ணக்கருக்கள் குறுக்கிணைப்புக்கள் உதாரணங்கள் என்பவற்றிற்கு முறையே 5,4,3,2,1 எனப் புள்ளிகள் வழங்கி மதிப்பிடமுடியும். இவ்வகையில் புள்ளி வழங்கலானது. நியமம் சார் மதிப்பிட்டு அணுகுமுறைக்கு முரணானவையாக அமையும் என்பதையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

> கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் ஒரு புதிய உத்தியாகப் பயன்படுத்தப்படும் எண்ணக்கரு வரைபடம் கணிப்பிட்டுக் கருவியாகப் பயன்படுத்தும் போது பாடசாலை மட்ட கணிப்பிட்டின் விளைவுகளை மேலும் வினைத்திறனுள்ளதாக மாற்றியமைக்கும். அதாவது கருத்துள்ள கற்றலுக்கு வழியமைத்தல், வகுப்பறை செயற்பாடுகளில் மகிழ்ச்சிகரமான சூழலை அமைத்தல் வினைத்திறனும் பயன்பாடுமுள்ள கற்றல் அனுபவங்களை வழங்குதல், அனுபவங்களை யதார்த்த பூர்வமான அன்றாட வாழ்க்கையில் பிரயோகித்தல் ஆகிய விளைவுகள் இவ்வகை கணிப்பீட்டுக் கருவிகளினூடாக பெற்றுக் கொடுக்க முடியும் என்பது திண்ணமே.

கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் ஒரு புதிய உத்தியாகப் பயன்படுத்தப்படும் எண்ணக்கரு வரை படம் கணிப்பிட்டுக் கருவியாகப் பயன்படுத்தும் போது பாடசாலை மட்ட கணிப்பிட்டின் விளைவுகளை மேலும் வினைத்திறனுள்ளதாக மாற்றியமைக்கும். அதாவது கருத்துள்ள கற்றலுக்கு வழியமைத்தல், வகுப்பறை செயற்பாடுகளில் மகிழ்ச்சிகரமான சூழலை அமைத்தல் வினைத்திறனும் பயன்பாடுமுள்ள கற்றல் அனுபவங்களை வழங்குதல், அனுபவங்களை யதார்த்த பூர்வமான அன்றாட வாழ்க்கையில் பிரயோகித்தல் ஆகிய விளைவுகள் இவ்வகை கணிப்பீட்டுக் கருவிகளினூடாக பெற்றுக் கொடுக்க முடியும் என்பது திண்ணமே.

**உசாத்துணை**


1. S. சந்தானம் (1993), கல்வியில் மனவியல், பொதுக் கருத்துப்படங்கள் சாந்தா பப்பிளிக்கேசன் சென்னை

2. மா. கருணாநிதி (2004), பாடசாலை மட்டக் கணிப்பீடு - நடைமுறைகளும் பிரச்சனைகளும் அகவிழி 01

3. பாடசாலை மட்டக்கணிப்பீட்டு வேலைத்திட்டம் (SBA / RD / 2004 / 01), இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பெலவத்த, பத்தரமுல்ல.

4. Barbara y. white (1992), The Thinker Tool Project University of California, Berkely.

5. Hand, B. & Prauie, V. (Eds) (1995) Teaching and Learning in Science, The Constructivist clasroom sydney.

6. Novak, J.D. (1990) Concept mapping: a useful tool for science Education, Journal of Research in Science Teaching.


❑

# கல்விச் சீர்திருத்தமும் சிறுவர் அரங்கும்

இலங்கையின் கல்வி வரலாற்றில் பாரிய கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கை 1998ம் ஆண்டு முன்னோடி / மாதிரியாக கம்பகாவில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் 1999ம் ஆண்டு நாடுமுழுதும் அமுலாக்கப்பட்டது. இம்மறுசீரமைப்பு ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி உயர்கல்வி என பாடசாலைக் கல்விக் கட்டமைப்பின் மூன்று வகையினரையும் கருத்திற்கெடுத்து செயற்பட்ட ஒன்றாக இருந்த போதும், ஆரம்பக்கல்வியில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களே நீண்டகால நோக்கத்தையும், நீடித்த மாற்றத்தையும் ஏற்படுத்தும் என நம்பப்பட்டது. கட்டாயக்கல்வி வழங்கப்படும். 5 முதல் 14 வயது வரையான சிறார்களை உள்ளடக்கிய தரம் 1 முதல் 5 வரையான ஆரம்பப்பிரிவு வகுப்புக்களில் பாட விதானம், கற்றல் - கற்பித்தல் முறையியல், குணநல உள்ளீடுகள் என பல மாற்றங்களை ஏற்படுத்தப்பட்டன. உண்மையில் இந்த மாற்றங்களின் அடிப்படையிலான அம்சங்களை கூர்ந்து நோக்கினால், புலமை சார்ந்த அல்லது அறிவு மையக்கல்வி என்ற நிலையில் இருந்து தேர்ச்சி மைய கல்வியை நோக்கி நகர்ந்தமையே இம் மாற்றம் எனக்கூறலாம்.

சிறார்கள் ஒவ்வொரு பாடத்திலும் உரிய தேர்ச்சியை அடைய வேண்டும் என்பது மட்டுமல்லாது அத்தியாவசியமான அடிப்படையான கற்றல் தேர்ச்சிகளிலும் பாண்டித்திய நிலையை அடைய வேண்டும் என்பது இந்த தேர்ச்சி மையக் கல்வியின் முக்கிய பண்புக்கூறாக இருந்தது. இங்கு ஒவ்வொரு தேர்ச்சிகளையும் மாணவர் அடைவதற்கும். சில முறைகள் சொல்லப்பட்டன. திட்டமிட்ட விளையாட்டுக்கள், குழுச் செயற்பாடுகள், எழுத்து வேலைகள் என்பவை இம்முறைகள் ஆயின. ஆகவே அடையவேண்டிய தேர்ச்சிகளும் பயன்படுத்தப்பட, கையாள வேண்டிய முறையியலும் வழங்கப்பட்டது.

சிறார்கள் ஒவ்வொரு பாடத்திலும் உரிய தேர்ச்சியை அடைய வேண்டும் என்பது மட்டுமல்லாது அத்தியாவசியமான அடிப்படையான கற்றல் தேர்ச்சிகளிலும் பாண்டித்திய நிலையை அடைய வேண்டும் என்பது இந்த தேர்ச்சி மையக் கல்வியின் முக்கிய பண்புக்கூறாக இருந்தது. இங்கு ஒவ்வொரு தேர்ச்சிகளையும் மாணவர் அடைவதற்கும். சில முறைகள் சொல்லப்பட்டன. திட்டமிட்ட விளையாட்டுக்கள், குழுச்செயற்பாடுகள், எழுத்து வேலைகள் என்பவை இம்முறைகள் ஆயின. ஆகவே அடையவேண்டிய தேர்ச்சிகளும் பயன்படுத்தப்பட, கையாள வேண்டிய முறையியலும் வழங்கப்பட்டது.

தேர்ச்சிகள், அதை அடைவிப்பதற்கான வழிமுறைகள், அடையப்பட்ட தேர்ச்சியை அளவிட கணிப்பீடு, போன்ற பலவிடயங்கள் கூறப்பட்டாலும் கூட நடைமுறையில் ஆசிரியர்களினால் இது சரியான முறையில் கையாளப்படவில்லை என்றே குறிப்பிட வேண்டும். ஏனெனில் இம்மாற்றங்கள் யாவும் ஆசிரியரினாலும், கல்விச் சமூகத்தினாலும், மாணவர்களாலும் மீண்டும் அறிவு சார்ந்த நிலையில் இருந்தே நோக்கப்பட்டது.

அவ்வாறாயின் எத்தகைய நிலையில் நின்று நோக்கினால் இது எதிர்பார்க்கப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற கேள்வி எழலாம். ஆம்.... அறிவு, புலமை சார்ந்த நிலையில் மட்டும் இருந்து நோக்காது, உணர்வு பூர்வமான ஒரு உதவியாகவும் ஒரு அனுபவமாகவும் கல்விச் செயற்பாடு நோக்கப்பட்டு செயற்படுத்தப்படும் போது மட்டும் தான் இந்த மாற்றம் ஏற்படும் எனக்கூறலாம். இத்தகைய சந்தர்ப்பத்திலேயே முன்னர் குறிப்பிட்ட கற்றல் கற்பித்தல் முறையியல் முழுமையாக பயன்படுத்தப்படக்கூடிய ஒன்றாக இருக்கும்.

எதிர்பார்க்கப்படும் இம்மாற்றம் நிகழ்வதற்கான அடிப்படைகள் முதலில் பாடசாலையில் வகுப்பறையில் ஆசிரியர் மாணவர்களிடையே இருத்தல் வேண்டும். பிரதான சில அடிப்படைகளை நோக்கினால், ஆசிரிய-

**முத்து இராதாகிருஷ்ணன்**
உதவிப் பணிப்பாளர்
வடகிழக்கு மாகாணம்
கல்வி திணைக்களம்.

ருக்கு தனது வகுப்பில் உள்ள ஒவ்வொரு பிள்ளையையும் முழுமையாக தெரிதல் வேண்டும். ஒவ்வொரு பிள்ளையினதும் பலம், பலவீனம், விருப்பம், ஆர்வம் குடும்ப நிலவரம் போன்ற சகல விடயங்களையும் ஆசிரியர் அறிந்திருத்தல் வேண்டும். இதன் அம்சமாகத்தான் தரம் 1ல் மாணவர்கள் பாடசாலையில் சேரும் போது நிகழ்த்தப்படும் முதற்செயற்பாடே "பிள்ளையை அறிவோம்" என்பதாக உள்ளது. (அதாவது புகுமுகத் தேர்ச்சியை அறிதல்.)

ஆசிரியருக்கு தனது வகுப்பில் உள்ள ஒவ்வொரு பிள்ளையையும் முழுமையாக தெரிதல் வேண்டும். ஒவ்வொரு பிள்ளையினதும் பலம், பலவீனம், விருப்பம், ஆர்வம் குடும்ப நிலவரம் போன்ற சகல விடயங்களையும் ஆசிரியர் அறிந்திருத்தல் வேண்டும். இதன் அம்சமாகத்தான் தரம் 1ல் மாணவர்கள் பாடசாலையில் சேரும் போது நிகழ்த்தப்படும் முதற் செயற்பாடே "பிள்ளையை அறிவோம்" என்பதாக உள்ளது. (அதாவது புகுமுகத் தேர்ச்சியை அறிதல்.)

இங்கு ஒவ்வொரு பிள்ளையையும் அறியவேண்டுமானால் பிள்ளைக்கு ஆசிரியர் தனது மனதில் இடங்கொடுக்க வேண்டும். அதாவது ஆசிரியருக்கும், மாணவர்களுக்கும் இடையில் அந்நியோன்னியமான இறுக்கமான உறவுநிலை இருக்க வேண்டும். ஆசிரியர் ஒரு நல்ல அம்மாவாக தேவையானளவு கண்டிப்புச் செலுத்தும் அப்பாவாக அல்லது சகபாடியாக பிள்ளை இலகுவில் நெருங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். இத்தகைய உறவு நிலை இருக்கும் போது வெளிப்படையான உணர்வுப்பகிர்வுக்கு இடம் கிடைக்கின்றது. சாதிக்கமுடியும் என்ற மனோ தைரியம் பிள்ளைக்கு ஏற்படுகின்றது. பிள்ளையில் ஏற்படும் இச்சிறுமாற்றங்களையும் இலகுவாகக் கண்டறியக்கூடிய திறன் ஆசிரியருக்கு ஏற்படும். இத்திறனே பிள்ளையை கணிப்பிட உதவும்.

மேற் குறிப்பிட்ட ஒரு சாதக நிலையில், பிள்ளையிடம் நல்ல விழுமியங்களையும், பழக்கவழக்கங்களையும் வளர்க்க முடியும். பிள்ளையுடன் ஆசிரியர் நெருக்கமாக பழகும் போது வகுப்பறை ஒழுங்கு சீர்குலைவதாக சிலர் குறிப்பிடுகின்றனர். பிள்ளைக்கு கொஞ்சம் இடம் கொடுத்தால் அவர்களுக்கு ஆசிரியர்களிடம் பயம் இருக்காது. அல்லது பயபக்தி இருக்காது. தேவையான மரியாதையைக் கொடுக்கமாட்டார்கள். வகுப்பறையில் சத்தம் போட்டு மற்றைய வகுப்புக்களையும் குழப்புவர் எனவும் பல ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

இங்கு ஒன்றைக் கவனிக்க வேண்டும். "வகுப்பறை" என்பது பௌதீக ரீதியிலான சீமேந்து, கல் கொண்டு கட்டிய ஒரு கட்டிடம் அல்ல. உயிர்த்துடிப்புள்ள பிள்ளைகள் மகிழ்வுடன் இயங்கும் ஒரு இடம் என்ற கருத்திலேயே நோக்குதல் வேண்டும். வகுப்பில் பிள்ளை தன்னுடைய சிந்தனையை கிளறி பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதும், மற்றயவர்களுடன் தனது கருத்துக்களை பகிர்ந்து அனுபவங்களை பெற்றுக்கொள்வதும், ஆசிரியரிடம் கேட்டு விளங்கிக் கொள்வதும் என பல முறைகளில் கற்றல் அனுபவத்தை பெற ஏதுவான இடமாக ஆசிரியர் வகுப்பறையை, வகுப்பறைச் செயற்பாட்டைத் திட்டமிடல் வேண்டும்.

ஒவ்வொரு விடயமும் ஆசிரியரின் வாயினால் வருவதாக இல்லாது பிள்ளை தானே அறிந்து கொள்ளக்கூடியதாக செயற்பாடுகளை திட்டமிடுதல் வேண்டும். பிள்ளை தான் கண்டுபிடித்த, தான் முயன்று பெற்ற தான் அனுபவித்த, தானே தேடிய விடயங்களை இலகுவில் மறந்து விடாது. அவ்விடயங்களை இலகுவில் மறந்து விடாது. அவ்விடயங்கள் நினைவில் பதிந்தே இருக்கும்

எனவே அவ்விடயங்கள் பற்றி வினவும் போது பிள்ளை சரியானதையும் முழுமையானதுமான அனுபவங்களை கூறவும் எழுதவும் பின் நிற்காது. எனவே பிள்ளை குறித்த விடயங்களில் தேர்ச்சியடைய வேண்டுமாயின் ஆசிரியர் ஒரு வசதியளிப்பவராக ஒரு அரங்க நெறியாளர் போல் தொழிற்படவேண்டியது அவசியம். பிள்ளை விருப்புடன் சரியாக இயங்கினால் வகுப்பு உயிர்த்துடிப்புள்ளதாக அசைந்து கொண்டிருக்கும். தேவையற்ற சத்தம் எழவாய்ப்பே இல்லை.

ஆசிரியருக்கு வகுப்பறைச் செயற்பாட்டை திட்டமிடவும் கற்பித்தல் முறையை வடிவமைக்கவும் சுதந்திரம் வழங்கப்படவேண்டியது மிக அவசியம். இந்த சுதந்திரமான செயற்பாடு என்பது வகுப்பறையை சடமாக்குவதற்கு அல்ல என்பதையும் அவ்வாசிரியர் உணர்ந்து கொள்ளுதல் மிகமிக அவசியம். இங்கு உயிர்த்துடிப்புள்ள வகுப்பறைச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு சிறுவர் அரங்க செயற்பாடு ஆசிரியருக்கு பெரிதும் கைகொடுக்கும். பிள்ளைகளுக்கிடையேயும் ஆசிரியருக்கிடையேயுமான இறுக்கமான நேரான உறவு நிலை வளரவும், விழுமியங்களை கைகொள்ளக்கூடிய மனப்பாங்கு வளர்த்தெடுக்கப்படவும் சிறுவர் அரங்கு செயற்பாடும் அனுபவமும் நிறையவே உதவுகின்றது.

புதிய கல்விச் சீர்த்திருத்தத்துக்கூடாக சிறார்களிடையே எதிர்பார்க்கப்பட்ட குறிப்பான மாற்றங்கள் (Impact) சிறுவர் அரங்க செயற்பாடுகளுக்கூடாகவும் இலகுவாக விருத்தி செய்யக்கூடியவை. இம்மாற்றங்கள் அல்லது தேர்ச்சிகளை நோக்கினால்.

1) குழந்தை தர்க்கரீதியாக சிந்திக்கப்பழகுதல்.
2) படைப்பாக்க திறனையும், சிந்தனையையும் வளர்த்தெடுத்தல்.
3) கற்பதற்கான விருப்பத்தையும், புதிய விடயங்களை அறிந்து கொள்ள விருப்பும் அவாவும் கொண்டிருத்தல்.

4) பிறருடன் இலகுவாக தொடர்பாடலை மேற்கொள்ளக்கூடிய துணிவும் திறனும் இருத்தல்

5) பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், விடுவிக்கவும் தீர்மானம் எடுக்கவும் கூடிய ஏது நிலையை எந்நேரமும் கொண்டிருத்தல்.

6) சுயகட்டுப்பாட்டு உணர்வைக் கொண்டிருத்தல், பிரயோகித்தல்.

7) தன்னம்பிக்கையும் திட சிந்தனையும், துணிவும் கொண்டிருத்தல்.

8) எதையும் நேர் தன்மையதாக எதிர்கொள்ளும் பக்குவம்,

9) பொறுப்புணர்வுடன் செற்படவும், விழுமியங்களை ஏற்று பின்பற்றவும் பொறுப்பேற்கவும் முன்வரும் திறன்கள் கொண்டிருத்தல்.

10) கூட்டாக தொழிற்படவும், பகிர்ந்து செயற்படவும் கூடிய மனப்பாங்குடையவராக இருக்கும் தன்மை.

11) நல்ல, சுகதேகமுடையவராக, போஷாக்கு நிறைந்த உணவை உண்பவராக இருத்தல்.

மேற் குறிப்பிட்ட அம்சங்களை பிள்ளைகளிடத்தே வளர்த்து செயற்திறன் மிக்க மனித நேயமுள்ள மனிதர்களாக மாற்றுவதற்கு ஆசிரியருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான ஒரு கலாசாரமாக இப்பண்புகள் வளர்க்கப்படுவதும் மிக அவசியம் இது முறையில் ரீதியிலான ஒரு முறையாக இருத்தல் வேண்டும்.

சிறுவர் அரங்க விளையாட்டுக்கள் முறையில் ரீதியிலான (**Informal**) ஒரு முறையாக கொள்ளப்படக்கூடியது. இவ்விளையாட்டுக்கள் இடையிடையே விளையாடப்படும் போது எதிர்பார்க்கப்பட்ட குறிப்பான மாற்றங்களில் பல அடையப்படுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுகின்றன. இதேபோன்று ஒரு சிறுவர் அரங்க ஆற்றுகையினை பழகும் போதும் அதனை ஆற்றுகைப்படுத்தும் போதும் இக்குறிப்பான மாற்றங்கள் பிள்ளைகளிடத்தே அவர்கள் அறியாமலேயே பாரியளவில் ஏற்படுகின்றது என்பது அனுபவத்தில் கண்ட உண்மை. எனவே செயற்திறன்மிக்க நல்ல இம்மாற்றங்கள் மாணவர்களின் கல்வித் தேர்ச்சிகளுக்கும் தூண்டுதலாக அமைந்து சிறந்த மனித வளங்களாக அவர்களை மாற்றும். ❑

ஆசிரியருக்கு வகுப்பறைச் செயற்பாட்டை திட்டமிடவும் கற்பித்தல் முறையை வடிவமைக்கவும் சுதந்திரம் வழங்கப்படவேண்டியது மிக அவசியம். இந்த சுதந்திரமான செயற்பாடு என்பது வகுப்பறையை சடமாக்குவதற்கு அல்ல என்பதையும் அவ்வாசிரியர் உணர்ந்து கொள்ளுதல் மிகமிக அவசியம். இங்கு உயிர்த்துடிப்புள்ள வகுப்பறைச் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு சிறுவர் அரங்க செயற்பாடு ஆசிரியருக்கு பெரிதும் கைகொடுக்கும். பிள்ளைகளுக்கிடையேயும் ஆசிரியருக்கிடையேயுமான இறுக்கமான நேரான உறவு நிலை வளரவும். விழுமியங்களை கைகொள்ளக்கூடிய மனப்பாங்கு வளர்த்தெடுக்கப்படவும் சிறுவர் அரங்கு செயற்பாடும் அனுபவமும் நிறையவே உதவுகின்றது.

*'தமிழ் மொழியைப் பொறுத்த அளவில் பேச்சு வழக்கு எழுத்து வழக்கு என்னும் இரு பெரும் வழக்குகள் இருந்து வருவதை நாம் அறிவோம். இத்தகையதொரு மொழிச் சூழலை நாம் மொழியின் இரு நிலைத் தன்மை என்று குறிப்பிடுகிறோம். ஒரு மொழியானது இரு வழக்குகளைக் கொண்டதாய் அவற்றுக்கிடையே அமைப்பு அளவிலான மாற்றமும் பயன்பாட்டு அடிப்படையிலான மாற்றமும் நிலவி வரும் சூழலை நாம் இரு நிலைத் தன்மை என்று கூறுகிறோம். தமிழ் மொழியில் உள்ள இரு நிலைத் தன்மையானது மொழியின் சிறப்புப் பயன்பாடுகளையும், இயல்புப் பயன்பாடுகளையும் நிறைவு செய்வதாக உள்ளது. சிறப்புப் பயன்பாடுகள் யாவும் தமிழ் மொழியின் எழுத்து வழக்காலும், இயல்புப் பயன்பாடுகள் யாவும் வருகின்றன.'*

கி. கருணாகரன், வ. ஜெயா,
தொடர்பாடல் மொழி நவீனத்துவம்,
*1993, பக் 75—76*

**உரையாடல்**

# தொழில் ஆசிரியம் தான் என்று முடிவானால்...



யாழ்ப்பாணக் கல்விச் சூழலில் நன்கு அறியப்பட்ட ஆசிரியர் க. சிவராமலிங்கம். குறிப்பாக யாழ். இந்துக் கல்லூரி மரபு வழி வந்த ஆசிரியர் குழாமில் வித்தியாசமானவர். தனித்துவமானவர். பாடசாலைச் சமூகத்துக்கு அப்பாலும் தனது பணிகளால் நிறைவு கண்டவர், காண்பவர். சிவராமலிங்கம் "சேர்" வழிவந்த மாணவர் பரம்பரை நீண்டது. இன்று அந்த மாணவர்களில் பலர் பல்வேறு துறைகளில் உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிவராமலிங்கம் சேரின் மொழிப்புலமை, இலக்கியம் கற்பிக்கும் பாங்கு, சமூக சமய விவகாரங்கள் பற்றிய ஆழ்ந்த புலமை, தத்துவ விசாரம், சொற் பொழிவு நிகழ்த்தும் அழகும் ஆழமும்... இப்படி அவசர சிறப்புகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம். இத்தகைய அனுபவ ஆளுமைச் சிற்பியுடன் அக விழிக்காக ஓர் நீண்ட செவ்வியை எழுத்தாளர் க. சட்டநாதனும் மதுசூத னனும் மேற்கொண்டார்கள். இந்த இருவரும் கூட அவரது மாணவர்கள்தான்.

(ஆ—ர்)

**உங்களது இளமைக்காலம் உங்களது ஆசிரியர்கள் அவர்கள் உங்கள் மீது ஏற்படுத்திய தாக்கம் பற்றிக் கூறுங்கள்.**

சிறிது சிரமமான ஒன்று. எனக்கு வயது எண்பதாகிறது. இருந்தும் நினைவில் பசுமையானவை சிலவற்றை அசைபோடலாம். அடியேன். என்பெற்றோருக்கு நான்காவது குழந்தை. ஆனாலும் தலைமகன். புரிந்து கொள்வீர்கள் தானே? கூட்டுக் குடும்பம் என்று கூற முடியாத போதும், மிக மிக நெருக்கமான உறவு, இறுக்கமான குடும்பக்கட்டமைப்பு. முதியோருக்குத் தரப்பட்ட முதன்மை மரியாதை - அவர்களின் கல்வித் தரம் புறந்தள்ளப்பட்டு, இன்று நினைத்தாலும் உள்ளம் சிலிர்க்கிறது. இவர்கள் எல்லோருக்கும் நான் செல்லப் பிள்ளை எப்போதும் யாரோ ஒருவர் தோள் மீதோ, எக்கிளிலோ சவாரி செய்த ஞாபகம். அதுதான் இப்போது மூன்று சில்லு வண்டிச்சவாரி.

பிறவிச் சைவம் சுத்த போசனம் இதனால் ஏனைய போசன்முறை அன்னியமானாலும் அருவருக்காத சுபாவம் தொடக்கப்பள்ளி வீட்டுக்கு அருகில் சிறிய தந்தையார் அமரர் சி.இ. சதாசிவம்பிள்ளை தலைமை ஆசிரியர். ஆசிரியர்களும் பெரும்பாலும் உறவினர். என் துடுக்கடக்கி வழிப்படுத்தினர்.

தமிழ் இலக்கியப்பற்றை அந்தே ஏற்படுத்திய பெருந்தகை அமரர் க. ஏரம்பு ஆசிரியர். ஐந்தாம் வகுப்பில் குமாரசாமிப் புலவர் இயற்றிய இராமோதந்தம் பாட நூல். ஆசிரியர் ஏரம்புவின் இனிய குரலும், நயத்தகுவிளக்கமும் என்னைக் கவர்ந்தன. சமயம் சார் இலக்கியங்களாம் பெரியபுராணம், கந்த புராணம், கதைகளாக என்னைத் தாலாட்டி நித்திரையாக்கின. என் தந்தையார் அமரர் சி. கணபதிப்பிள்ளை சித்த வைத்தியர் சித்தாந்த வித்தகர். சிவபூசா துரந்தரர். நாவலர் பெருமானின் ஞான பரம்பரையினரான வேலணை சைவ நாகலிங்க உபாத்தியாரின் மாணவர். இவரின் வாய்வழி, என் செவிபுகுந்த சமய இலக்கிய அறிவு இன்றும் நிலைத்துளது.

உயர்நிலைப் பள்ளிகள், வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ் இந்துக் கல்லூரி இவைகள் தந்த ஊட்டம் எழுத்தில் அடங்கா. வைத்தீஸ்வராவில், அதிபர் ச. அம்பிகைபாகன், ஆசிரியப்பெருமக்கள் C. வயிரமுத்து

(ஆங்கிலம்) கணித மேதை வைத்திலிங்கம் போன்றோர் மறக்கப்படாத மனிதர்கள். இங்குதான் ஈழத்தின் இறை ஒளி சுவாமி விபுலானந்தரை முதன் முதல் தரிசிக்கவும் உரையாடவும் வாய்ப்புக்கிடைத்தது.

விடுதியுடன் கூடிய பாடசாலை ஒன்றின் தேவை என்னை யாழ் இந்துக்கல்லூரிக்கு ஆற்றுப்படுத்தியது.

என் குடும்பப்பின்னணியில் வேறு கல்லூரிகளை நினைக்கமுடியாமையும், என் உறவினர் பலர் பயின்ற கல்லூரி என்பதாலும் இங்கு சங்கமமானேன். பின் என்ன?

இன்று, என்னை நான் ஆக்கிய கலைக்கோயில் யாழ். இந்துவே.

யாழ். இந்துவில் என் ஆசிரியர்களாக அமைந்த அமரர்கள் K.S. சுப்பிரமணியம், ஒரேற்றர். C. சுப்பிரமணியம் M. மயில்வாகனம் A.S. கனகரெத்தினம், V. சுப்பிரமணியம் V. இராமகிருஷ்ணன் C.M. குலசிங்கம், V.M. ஆசைப்பிள்ளை, C. சபாரத்தினம் (பின்னாள் அதிபர்கள்) நெஞ்சில் நிலைத்து நிற்கும் மனிதமாணிக்கங்கள்.

விடுதி அதிபராயும் பணியாற்றிய K.S. சுப்பிரமணியம் தந்த ஊக்கமும் பயிற்சியும் மாணவ முதல்வனாக்கி (Prefect) தமிழ் மன்றச் செயலாளனாக்கி உருவாக்கியமை, என் பல்கலைக்கழக வாழ்க்கைக்குப் பெருந்துணை ஆனதை நன்றியுடன் நினைத்து நிற்கிறேன். "தன்னலம் மறந்து நல்லது செய்பவன் முன் அதிகாரம் அஞ்சி நிற்கும்" என்பது, யாழ். இந்து வாழ்க்கை எனக்குக் கற்பித்த கற்பனை.

***நீங்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண் டவர் என அறிகிறோம் அப் பல்கலைக் கழகம் உங்களது கல்விசார் ஆளுமை விருத்திக்கு எவ்வகையில் உதவி யுள்ளது?***

ஒரு சிறு திருத்தம். என் பல்கலைக்கழகக் கல்வி அண்ணாமலையில் தான் ஆரம்பமானது. ஆனால் பட்டம் பெற்றது சென்னை தாம்பரம் கிறித்தவக்கல்லூரி வாயிலாகச் சென்னை பல்கலைக்கழகத்தில் தான்.

அண்ணாமலையில் தான் தமிழனைத் தரிசித்தேன் பன்மொழிப்புலவர் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் ஒரு நடமாடும் பல்கலைக்கழகம். சட்டவல்லுனர். காந்தீயன். அன்பின் இருப்பிடம். மலையில் முட்டிய குருவியையும் பரிவுடன் ஏற்கும் பண்பினன். அன்னார் தொடர்ந்தும் அண்ணாமலையில் தமிழ்ப் பேராசிரியராக இருந்திருந்தால் கடவுள் கிளப்பியிருந்தாலும் அண்ணாமலையை விட்டுக் கிளம்பியிருக்க மாட்டேன்.

அண்ணாமலையில் தான் தமிழனைத் தரிசித்தேன் பன்மொழிப் புலவர் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் ஒரு நடமாடும் பல்கலைக்கழகம். சட்ட வல்லுனர். காந்தீயன். அன்பின் இருப்பிடம். மலையில் முட்டிய குருவியையும் பரிவுடன் ஏற்கும் பண்பினன். அன்னார் தொடர்ந்தும் அண்ணாமலையில் தமிழ்ப் பேராசிரியராக இருந்திருந்தால் கடவுள் கிளப்பியிருந்தாலும் அண்ணாமலையை விட்டுக் கிளம்பியிருக்க மாட்டேன்.

தெ.பொ. மீ.க்குப் பின் தமிழ்ப் பேராசிரியரான A. சிதம்பர நாதச் செட்டியார் - அரசியல் நோக்கில் எதிர் அணியினரானாலும்- புலமைமிக்கவர். பண்பாளர். இலங்கை மாணவர் மன்றத்தின் காப்பாளர். செயலாளராகப் பணிசெய்த காலத்தில் என்னோடு நெருக்கமாகப் பழகியவர்.

மன்றத்தின் செயற்பாட்டு மொழி தமிழாகவே அமைய வேண்டும் என்ற என் வாதத்தைப் பெருமனதோடு ஏற்றுக்கொண்டு யாப்பைத் திருத்தியவர். பிற்காலத்தில் மதுரை தியாகராஜக் கல்லூரி முதல்வராகப் பணியாற்றி மறைத்தவர். ஆட்சித்திறன் மிக்கவர். இளங்கோ அடிகளின் மறு பிறப்போ! என என் மனதில் பதிந்தவர்.

எல்லாவற்றுக்கும் சிகரமாக என் ஆளுமையை - அது என்னிடம் உண்டு என்று நீங்கள் கருதினால் - வளர்த்தவர். வெள்ளிக்கிழமை தோறும் நான் தவறாது சென்று கண்டு பேசிய தில்லைக் கூத்தன் தான்.

"என்று வந்தாய் என்னும் எம்பெருமான் திருக்குறிப்பே" என்கிறார் அப்பர் சுவாமிகள்.

"இல்லை என்பார் யாரெடா? என் அப்பனைத் தில்லையிலே பாரெடா?" என்கிறார் சுத்தானந்த பாரதியார்.

"உனக்கும் நடராசனுக்கும் இடையில் தீட்சிதரைத் தவிரவேறு யாரும் நிற்காது பார்த்துக் கொள்" என்ற என் ஆசான் வித்துவான் கார்த்திகேசு அவர்களின் பொன் மொழிகளை தலைமேற் கொண்டு, நடராசனிடம் நான் பெற்ற ஆளுமை - எதையும் தாங்கும் இதயம் இன்பம்... சென்னை கிறிஸ்த்தவக்கல்லூரி இரு ஆண்டுகள் எவையும் மறக்க முடியாதவை.

அதிபர் Rev. Dr. A.J. பொயட் ஆங்கிலேயர். இராணுவ வீரர் ஆங்கிலப் பேராசிரியர். விரிவுரை ஒரு மணிநேரமும், சிரித்து வயிறு நோக வைத்து விடுவார். சரளமாகப் பேசுவார். ஆனால் மிகவும் கண்டிப்பானவர். ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களின் பெயர்களையும் - கொம்பியூட்டர் அப்போது இல்லை - தன் கொம்பியூட்டர் மூளையில் பதிந்து வைத்திருந்த அசாதாரண மனிதர். பிரமச்சரியத்தின் மகிமை தானோ அறியேன். இரக்கமுள்ளவர் - கூப்பர் நிதிக்காக ஒரு சட்டைப்பையை வைத்திருந்தவர். சிறு குற்றங்களுக்கு -கடதாசியைக் கசக்கி வீசுதல், பசுந்தரையை மிதித்தல், சுவரில் கால்பதித்து நிற்றல் போன்றன- முதல் மன்னிப்பு.

மறுமுறை தண்டம் இரண்டனா. பணம் இல்லை சேர் என்றால் தன் பொக்கற்றில் இருந்து இரு ஆனாக்குற்றி ஒன்று தருவார். நாங்கள் அவர் கையில் கொடுக்க வேண்டும். கூப்பர் நிதிப் பைக்கற்றில் அதுசேரும்.

பல மாதங்களுக்குப் பின் சந்திக்கும் போது "You owe me two annas" என்று கேட்டுப் பெற்றுக் கொள்வார். இவரைப் போல் யாரையும் யாரும் காண முடியாது

மனத்திரையில் மனதையாது நிற்கும் தெய்வ "மனிதம்". இவரிடமும் பாடம் கேட்டேன் என்பது எனக்குப் பெருமைதானே. பேராசிரியர் மக்ஃப்யில் பிரமச்சாரி. Shakespere, Milton பாடம் நடத்தியவர். சேக்ஸ்பியரின் மறு பிறப்பு என்று எண்ண வைத்தவர். நாடகங்கள் அத்தனையும் மனப்பாடம். Hamlet பாடம் நடத்தும் போது, பொருத்தமான இடங்களில் மேற்கோள்கள் பிறநாடகங்களிலிருந்து வந்து விழும். "To be or not to be" விளக்கம் வேண்டியதில்லை Hamlet ஆக ஆசான் நிற்கும் போது மண்டபம் மரண அமைதி காக்கும். வகுப்பில் பெண்கள் சிலரே. தொடக்க நாள் பெண்கள் பின் இருக்கைகளில் அமர்ந்து விட்டனர். மக்ஃப்யில் நுழைத்தார். மேடையில் ஏறினார்.

அதிபர் Rev. Dr. A.J. பொயட் ஆங்கிலேயர். இராணுவ வீரர் ஆங்கிலப் பேராசிரியர். விரிவுரை ஒரு மணி நேரமும், சிரித்து வயிறு நோக வைத்து விடுவார். சரளமாகப் பேசுவார். ஆனால் மிகவும் கண்டிப்பானவர். ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களின் பெயர்களையும் — கொம்பியூட்டர் அப்போது இல்லை — தன் கொம்பியூட்டர் மூளையில் பதிந்து வைத்திருந்த அசாதாரண மனிதர். பிரமச்சரியத்தின் மகிமை தானோ அறியேன். இரக்கமுள்ளவர். இவரைப் போல் யாரையும் யாரும் காண முடியாது

"I want my beautiful damsels infront to inspire me" என்றார். முன் வரிசையில் இருந்த நாங்கள் சிரிப்பொலியில் மறைந்து பின்வாங்கினோம். Cut அடிக்க விரும்பாத விரிவுரைகள் என்றால் அவை மக்ஃபயிலில் விரிவுரைகள் தான். இலக்கியம் கற்பிக்கும் பாணிக்கு மக்ஃப்யில் ஒரு கலங்கரை விளக்கம்.

தமிழ் - "இருந்தமிழே உன்னால் இருந்தேன்" எனக்கும் தமிழ் தெரியும் என்று நீங்கள் நம்பினால், அந்தப் பாக்கியத்தை தந்தவர் என் அன்புக்கும் வணக்கத்துக்கும் உரிய பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரனார்தான்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சுவாமி விபுலானந்தரிடமும் கந்தசாமிப் பெரியாரிடமும் தமிழ் பயின்றவர். நாட்டுக்கோட்டைச் செட்டியார். சிவனை மறவாச்சிந்தையர். அலங்காத நலங்காத ஆங்கிலப் பாணி உடை அணிந்து வந்தவர். நெற்றியில் சிவ சின்னம் துலங்கும். விரிவுரைகளில் வெட்டிப் பேச்சுகளுக்கு இடமே இராது. அரசியல், சமய மாற்றுக்கருத்துக்கள் உள்ள மாணவ கூட்டத்தை, மனங்கொண்டு, நாசூக்காக வகுப்பை நடாத்தி வெற்றி கண்டவர்.

அவ்வப்போது "அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன்" என்பார். அப்பகுதிகள் தேர்வுக்கு வினாவாக வந்தமைகண்டு வியத்தோம் கண்ட முதல் நாளே கவரப்பட்டேன். ஈர்த்துக் கொண்டார்.

மாலை நேரங்களில் தாம்பரம் வீதிகளில் உலாவருவோம் அப்போதெல்லாம் பேராசிரியர் உதிர்த்த தமிழ் மணிகளை முடிந்தளவு பொறுக்கிக்கொண்டேன். பயனை இன்னும் துய்த்து மகிழ்கிறேன்.

சுயமாகச் சிந்திக்கவும் அச்சமின்றிக் கருத்தை முன்வைக்கவும் மாணவர்களுக்கு இடமளித்தல், மாணவர்களின் சுயமான சிந்தனை வளர்ச்சிக்கும் ஏன் ஆசிரியனின் தன் ஆய்வுக்கும் பெரிதும் உதவும், என்ற கருத்தை என்னுள் நிறுத்திய இரு பேராசான்களை நினைவு கூருதல் இங்கு பொருந்தும்.

ஒருவர் சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர் ஸ்ரீ கோபாலையர், அந்தணர், ஆங்கிலமும் செந்தமிழும், வடமொழியும் வல்லவர். ஒரு சுவாரஸ்யமான பேர்வழி. சிறிது கூச்சமுள்ள வயதான வாலிபர். வகுப்பில் பெண்கள் இல்லாத போதுதான் அவர் விரிவுரைகள் களைகட்டும் ஒரு விரிவுரையின் போது இலங்கைப் பெண்கள் சிரசில் கை கூப்பி வணங்குவது தப்பு என்றார். என்னைக் கிளறிவிட்டார். "சேர், ஆலவாய் அண்ணல் கோயிலில் பாண்டி மாதேவியார் சம்பந்தப் பெருமானை சிரசில் கை கூப்பி வணங்கினார் என்று தெய்வச் சேக்கிழார் பேசுகிறாரே! ஆக, மங்கையர்க்கரசியாரும் இலங்கைப் பெண்தானா? சேர், எங்களுக்கு மகிழ்ச்சி" என்றேன். வகுப்பு கலகலத்தது.

"பிள்ளைவாள் அமருங்கள் நான் என் கருத்தை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன்" என்றார். என் இதயத்தில் தெய்வமானார்.

பேராசிரியர் கலாநிதி சந்திரன் தேவநேசன். கேம்பிறிஷ் பல்கலைக்கழகம் உருவாக்கி மேதை. வரலாறும், அரசியல் விஞ்ஞானமும் அவர் கை வந்த கலைகள். ஆங்கிலேய விரிவுரையாளர்களின் மொழித்திறன் ஒரு வகை. உதடுகளுக்கிடையில் சொற்கள் தப்பி விழும். உன்னிப்பாகக் கேட்க வேண்டும். சந்திரனின் மொழித்திறன் தனியானது. இனிமையும், தெளிவும், செதுக்கி எடுத்த சொற் பிரயோகமும் மயக்கும். ஒரு தூய்மையான கிறித்தவர். பொதுவுடைமைக்கருத்தை வரித்துக் கொண்டவர். இலங்கைச் சிங்கள மாதைக் காதலித்து மணந்தவர். இலங்கை மாணவர்களுக்கு அவர் இல்லம் தாய் வீடு...

(தொடரும்)

விவாதம்

# புலமை வறுமையின் வரலாறு

ஆராய்ச்சியும் விருத்தியும் சமாந்தரமாக செல்ல வேண்டும். அப்போது தான் ஒரு சமூகம் முன்னேறும். ஆய்வை மேற்கொள்ளாத சமூகத்துக்கு எதிர்காலம் இல்லை. எனவே தமிழ் சமூகத்துக்கு எதிர்காலம் இல்லை என்ற எளிய முடிவுக்கு வந்து விடுகிறோம்.

தமிழ் சமூகத்துக்கு எதிர்காலம் இல்லாமற் போனதற்கு யார் மீது பழியைப் போடுவது? பல பதில்கள் உண்டு. மொழி வழிப்பட்ட இரண்டு பிரதான குற்றஞ்சுமத்தல்களை சொல்லலாம். முதலாவ தாய் மொழிக்கல்வியின் தொடர்ச்சியாய் பல நன்மைகள் கிடைத்த போதும், தமிழ், மொழியிள் கற்றவர்களால் சமூகத்துக்கு நன்மை செய்ய முடியாமற் போனதுடன் தம்மளவில் அவர்களாலும் பிரகாசிக்க முடியாமற் போனது. எனவே தாய் மொழிக்கல்வியில் பழியை போட்டு மூன்று தலைமுறைக்கு முன்னிருந்து ஆங்கில வழிக்கல்விக்கு கால் கோள் இடப்பட்டுள்ளது.

தமிழ் சமூகத்துக்கு எதிர்காலம் இல்லாமற் போனதற்கு யார் மீது பழியைப் போடுவது? பல பதில்கள் உண்டு. மொழி வழிப்பட்ட இரண்டு பிரதான குற்றஞ் சுமத்தல்களை சொல்லலாம். முதலாவதாய் மொழிக்கல்வியின் தொடர்ச்சியாய் பல நன்மைகள் கிடைத்த போதும். தமிழ். மொழியிள் கற்றவர்களால் சமூகத்துக்கு நன்மை செய்ய முடியாமற் போனதுடன் தம்மளவில் அவர்களாலும் பிரகாசிக்க முடியாமற் போனது. எனவே தாய்மொழிக்கல்வியில் பழியை போட்டு மூன்று தலை—முறைக்கு முன்னிருந்து ஆங்கில வழிக்கல்விக்கு கால்கோள் இடப் பட்டுள்ளது.

இரண்டாவது பழிசுமத்தல் சிங்களத்துவ ஆட்சிவாதம் பற்றியது. 1956 இல் சிங்களம் ஆட்சி மொழியாகி அடுத்த புத்தாண்டுகளிலேயே வடகிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசம் எங்கனும் சிங்கள ஆட்சிவாதம் மிக வேரூன்றியதுமன்றி, தமிழ் வழிபட்ட கல்வி பெற்றவர்களுக்கு இடமில்லாமலும் செய்து விட்டது. எனவே சிங்கள ஆட்சிவாதமே தமிழ் சமூகத்தில் இருந்து தோன்றியவர்கள் பிரகாசிக்க வழிவிடாமற் செய்து விட்டது எனப்படுகிறது.

கற்றல் சூழல் குறித்தும் குறிப்பாக ஆங்கில வழி கற்றல் குறித்த இவ் விவாதத்தில் இக் கட்டுரை இன்னொரு காரணத்தை இனங்காட்ட விரும்புகின்றது. அது புலமைவறுமை குறித்தது. தமிழ்மொழி நிலைப்பட்டு இற்றை காலம் வரை எழுதப்பட்ட தெல்லாம் புலமையின் வரலாறே. நாம் எழுத மறந்ததும் மறுத்ததும் புலமை வறுமையின் வரலாற்றை தாய்மொழிக் கல்வியின் பயன் சமூகத்துக்கு கிடைக்காமைக்குரிய காரணம் புலமைவறுமையே யன்றி வேறெல்ல என்பதை இக்கட்டுரை முன்வைத்து இவ்விவாதத்தில் பங்கேற்கிறது.

தாய்மொழிக்கல்வி அறிமுகமானவுடன் பாடநூல்கள் எழுதப்படுவதன் மூலம் அறிவியல் தமிழ் ஆக்கபூர்வமாக வளர்வதற்கு அடிப்படை இடப்பட்டது. மொழி பெயர்ப்பது மொழியை சிதைப்பதற்கல்ல. செழுமைப்படுத்தவே.

ஆரம்பநிலையில் தமிழாக்கப்பட்ட நூல்களில் மொழி அந்நியப்பட்டிருந்த போதும் இரண்டாம் மூன்றாந் தலைமுறைக்கு இவங்கையில் அறிவியல்தமிழ் அந்நியமான தொன்றாக இருக்கவில்லை. ஆனால் தமிழ் சிந்திக்க தெரிந்தவர்கள் உருவாக்கப்பட்டார்களா? தமிழ் நிலைப்பட்டு சமூக முன்னேற்றத்துக்குரிய ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டனவா? மீளவும் மீளவும் நாம் மொழி பெயர்ப்புக்களில் தங்கி இருக்க நேர்ந்தமைக்கு என்ன காரணம்? வடக்கு கிழக்கில் இரண்டு பல்கலைக்கழகங்கள் சமூகந்தழுவிய முன்னேற்றத்தின் பொருட்டு நிலைபெற்ற போதும், அவை சமூக முன்னேற்றத்துக்கு எத்தகைய ஆக்கபூர்வமான பணியை முன்னெடுத்தன? இவ்வினாக்களுக்கு பதில் அளிப்பது அவசியம்.

ஆர். சுந்தரவேல்

சிங்கள ஆட்சிவாதமும், தாய்மொழிக் கல்வியின் மீதும் குற்றம் சுமத்த முடியாது. கிடைத்திருக்கக்கூடிய வளங்களைக் கொண்டு சமூகத்தின் தூண்களாக கருதப்படக்கூடிய புலமையாளர், சமூகத்துக்கு ஆற்றியிருக்க வேண்டிய பணியை ஆற்றியிருக்கவில்லை. அவ்வாறு சமூகப் பொறுப்புணர்வுடன் இயங்கி இருந்தால் இன்று யப்பானில் உள்ள ஒரு ஆய்வாளன் தனது மொழியில் சிந்தித்து ஆய்ந்து சுயமாக தம் மொழியில் எழுதி பதிப்பித்து தனக்கும், தன் சமூகத்துக்கும் அடுத்த தலைமுறைக்கும் பணி செய்வது போல், பல தமிழ் வழி ஆய்வாளர்களை அறிவாலும் உணர்வாலும் தகமையுள்ளவர்களை சமூகத்துக்கு தந்திருப்பார்கள்?

ஆனால் எமது புலமை வரலாறு அடிவருடிகளையும், ஆளுமையற்றவர்களையும், கிளிப்பிள்ளைகளையுமே சமூகத்துக்கு தந்துள்ளது.

கல்விகள் பதவிகளுக்கான கௌரவப் பதவிகளுக்கான போராட்டமே, பேராசிரியர் பதவிக்கான போராட்டமே என புலமை வரலாற்றின் மறுபக்கமாக உள்ளது. எனவே தான் மீள மீள கூறுகின்றோம். எமது புலமைவறுமையின் வரலாற்றை நாம் எழுத வேண்டும். அதுவே வரலாற்றுப் பிழை எங்கு நேர்ந்துள்ளது என்பதை துலாம்பரமாகக் காட்டும். ❑

---

*'இன்றைய மனிதனைக் கல்வி வயப்படுத்துவது மிக அரியதொரு செயல் என்று பல நாடுகள் கருதுகின்றன் எல்லா நாடுகளும் அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் நினைக்கின்றன. இன்றைய உலகை இன்னும் சிறந்ததாக ஆக்கவும் எதிர்காலத்திற்கு ஆயத்தம் செய்யவும் விரும்பும் யாவருக்கும் கல்வியே தலையாய உலகளாவிய பொருளாகவுள்ளது.'*

**- வாழக் கற்றல் கல்வி உலகம் இன்னும் நாளையும் பக் xiiii**

*'மாணவன் தான் கற்கும் மொழியின் மீதும் அம்மொழியைப் பேசுவோரின் பண்பாட்டின் மீதும் எந்த வகையான மனப்பாங்கு கொண்டிருக்கிறான் என்பதும் அவன் மொழியைக் கற்கும் வேகத்திற்கு உகந்ததாகவோ பாதகமாகவோ அமைய முடியும். அதைப் போலவே கற்பிக்கிற ஆசிரியர் மேல் இருக்கும் மனப்பாங்கும் அவர் பயன்படுத்துகிற வகுப்பறை முறைகள் மீது கொண்டிருக்கிற மனப்பாங்கும் மிக முக்கியமானவையாகும். மேலும், மாணவர்களுக்கிடையே சிலருக்கு எழுத்து மொழியை எளிதிலே கற்றுக் கொள்ளும் திறமை அதிகமாக இருக்கலாம் வேறு சிலருக்கோ பேச்சு மொழியை எளிதிலே கற்றுக்கொள்வதற்கான திறமை அதிகம் இருக்கலாம். அதனால் மாணவர்களின் இயல்புக்கும் திறமைக்கும் ஏற்பப் பாடங்கள் அமையுமானால் அவர்கள் மொழியைக் கற்றுக் கொள்ளும் வேகம் அதிகரிக்கும் பேச்சு மொழியைக் கற்றுக் கொள்கிற திறமை அதிகமுள்ள ஒரு மாணவனுக்கு எழுத்து மொழியை முதலில் கற்றுத் தருவதும் எழுந்து மொழியைக் கற்றுக் கொள்வதில் அதிக திறமையுள்ள ஒரு மாணவனுக்குப் பேச்சு மொழியைக் கற்றுத் தருவதும் சரியானதன்று.'*

**டாக்டர். மா. சு. திருமலை, தமிழ் கற்பித்தல், 1998, பக் 47**

விவாதம்

# கிராமத்துப் பையன்கள்

# இரு மொழிப்புலமையாளர்களாய் இருந்தனர்

வரலாற்று ரீதியாக எமது கல்வி முறையில் ஆங்கிலம் பெற்ற வகிபாகத்தை எடுத்து நோக்குவோமாயின் மூன்று வகையான ஆய்வறிவாளர் குழாங்கள் எம்மத்தியில் உருவாகுவதற்கு இடம் உண்டாயிற்று.

1) மேற்கு மயப்பட்ட ஆய்வறிவாளர் (Westernised intellectuals)

2) ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் புலமைமிக்க ஆய்வறிவாளர் இரு மொழிப்புலமை உடைய ஆய்வறிவாளர்கள்.

3) தமிழில் மட்டும் புலமைமிக்க ஆய்வறிவாளர்.

கார்லோ பொன்சேகா குறிப்பிடும் "கிராமத்துப் பையன்கள்" மேலே குறிப்பிட்டவற்றுள் இரண்டாம் வகையினைச் சேர்ந்தவர்கள், முதல் வகையினர் எமது சமூக பண்பாட்டு வாழ்விலும் அறிவுத்தளத்திலும் தம்மை இணைத்துக் கொள்ள முடியாதவர்கள். இவ்வகையினர் இன்று அருகி வருகின்றனர் 1920 - 1940 காலப்பகுதியில் தமது இளமைக்காலக் கல்வியைப் பெற்றவர்களான முந்திய தலைமுறையில் பெரும்பான்மையானோர் இத்தகையோரே. இத்தலைமுறையைச் சேர்ந்தவரும் இடதுசாரிச் சிந்தனையாளருமான வைத்திய கலாநிதி டாக்டர் ஜசக் தம்பையா தம் சுயசரிதைக்குறிப்புக்களை “A Stranger in his own Land” என்ற தலைப்பில் நூலாக எழுதி வெளியிட்டார். இந்நூலின் தலைப்பை "அன்னை பூமியில் நான் ஓர் அந்நியன் என்று மொழி பெயர்க்கலாம். உயர்ந்த ஆய்வறிவாளனாக, இடதுசாரிச் சிந்தனையாளனாகத் திகழ்ந்த யாழ்ப்பாணத்துத் தமிழர் ஒருவர் தன் அன்னை பூமியில் இருந்து அந்நியப்பட்ட நிலையை தன் நூலின் தலைப்பின் மூலம் சோகம் நிரம்பிய தொனியில் இவ்விதம் வெளிப்படுத்தினார்.

"எனது கல்லூரி வாழ்க்கையின் சாதனைகள் மகத்தானவை. சுய மொழிக்கல்வி இல்லாதிருந்தால் நான் இச்சாதனைகளை செய்திருக்க முடியாது. எனது பல்கலைக் கழகக் கல்வியை பற்றியும் நான் இறுமாந்திருந்தேன். என் கல்வி வாழ்க்கை முடிந்த பின் சில ஆண்டுகள் வேலையற்று இருந் தேன். பின்னர் ஒரு தொழில் கிடைத்தது. இன்று வரை ஓயாது படித்து வருகிறேன். ஆனால் காலம் கடந்த ஞானோதயம். ஆங்கில அறிவு இன்மை என் வாழ்க்கையைப் பயனற்றதாக்கி விட்டது. "ஆய்வறிவாளன்" என்ற இறுமாப்பு எப்பொழுதோ போய் விட்டது எமது தலைமுறை மக்கி மண்ணாகி விட்டது. எனது மகளுக்கும், மகனுக்கும் இந்தக் கதி நேரக்கூடாது"

ஆங்கிலக் கல்வி மூலம் இந்த வகை அந்நியப்படுத்தப்பட்ட நபர்களை உருவாக்க வேண்டுமா? நிச்சயம் தேவையில்லை.

கார்லோ பொன்சேகா குறிப்பிடும் "கிராமத்துப் பையன்கள்" இலங்கையில் தோன்றிய கால கட்டத்தில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் புலமை பெற்ற இரண்டாம் வகையினர் கணிசமான எண்ணிக்கையில் தோன்றினர். தமிழ் இலக்கிய உலகில் காத்திரமான பங்களிப்பைச் செய்தவர்களான முருகையன், கைலாசபதி, சிவத்தம்பி, எஸ். பொன்னுத்துரை, எஸ்.டி. சிவநாயகம், கே. எஸ். சிவகுமாரன் அ. முத்துலிங்கம், சி. சிவசேகரம் ஆகியோர் கிராமத்துப் பையன்கள் தான். இலக்கியத்திற்கு வெளியேயும் இவ்வகையான கிராமத்துப் பையன்கள் பலரை நாம் இனம் கண்டு கொள்ளலாம்.

இன்று தமிழ்ச் சூழலில் முதலாம் வகையான அந்நியப்பட்ட ஆய்வறிவாளர் அருகி விட்டனர். இரண்டாம் வகையான இருமொழிப் புலமையாளர்களும் மறைந்து வருகின்றனர். இன்னும் பத்து ஆண்டுகளுக்குள் இவர்களும் முற்றாக

அர்ஜுனா

மறைந்து விடுவர். எமது தமிழ்ச் சூழலில் தமிழில் மட்டும் புலமை மிக்க ஆய்வறிவாளரே எஞ்சியிருப்பர். எனது இந்தக் கூற்றை சிலர் ஆட்சேபிக்கலாம். ஆனால் உண்மையை மூடிமறைத்து எவ்வளவு காலத்திற்கு நாம் வேஷம் போட முடியும்?

1970 களில் பட்டம் பெற்று பொது வாழ்விலும் அறிவியற் தளத்திலும் செயற்பட்டு வரும் நண்பன் ஒருவன் விரக்தியுடன் கூறியவை இவை.

"எனது கல்லூரி வாழ்க்கையின் சாதனைகள் மகத்தானவை. சுயமொழிக்கல்வி இல்லாதிருந்தால் நான் இச்சாதனைகளை செய்திருக்க முடியாது. எனது பல்கலைக்கழகக் கல்வியை பற்றியும் நான் இறுமாந்திருந்தேன். என் கல்வி வாழ்க்கை முடிந்த பின் சில ஆண்டுகள் வேலையற்று இருந்தேன். பின்னர் ஒரு தொழில் கிடைத்தது. இன்று வரை ஓயாது படித்து வருகிறேன். ஆனால் காலம் கடந்த ஞானோதயம். ஆங்கில அறிவு இன்மை என் வாழ்க்கையைப் பயனற்றதாக்கி விட்டது. "ஆய்வறிவாளன்" என்ற இறுமாப்பு எப்பொழுதோ போய் விட்டது எமது தலைமுறை மக்கி மண்ணாகி விட்டது. எனது மகளுக்கும், மகனுக்கும் இந்தக் கதி நேரக்கூடாது"

1990 களின் பிற்பகுதியில் பட்டம் பெற்று ஒரு கல்வியாளன் என்ற பெரு மிதத்துடன் வாழ்வில் காலடி வைத்த இளைஞன் ஒருவன் கூறியவை.

"எனது பாடத்தில் இரண்டாம் வகுப்பு உயர் பிரிவு (Upper Second) சித்திபெற்றவன் என்ற தகுதி எனக்கு உண்டு. வேலையற்று அலைந்த எனக்கு "தருண அருண" திட்டத்தின் கீழ் ஒரு தொழில் கிடைத்தது. இரண்டு வருடம் இத்தொழிலில் நான் பட்ட அவமானத்தை சொல்லில் கூறமுடியாது கொழும்பின் பிரபல கல்லூரிகளில் க.பொ.த (உ.த) வரை மட்டும் படித்தவர்களை நிர்வாகத்தரப் பதவிகளில் நியமித்திருக்கிறார்கள். இவர்களுக்கு எம்மை விட வயதும் நான்கு ஐந்து வருடம் குறைவு, சிலர் 23,24 வயதினர். "தருண அருண" பட்டதாரிகளாகிய நாம் அவர்களுக்கு கீழ் வேலை செய்தோம். எமது பிரிவுக்குப் பொறுப்பான மேலாளர் பட்டதாரிகளை விட ஆங்கில அறிவுமிக்க க.பொ.த (உ.த) படித்தவர்கள் மேலானவர்கள் என்பதை எமக்கு அடிக்கடி ஞாபகப்படுத்தும் "குத்தல்" கதைகளைக் கூறுவார். நான் தொழிலை விட்டு விட்டேன். இந்த நாட்டில் எமக்கு எதிர் காலம் இல்லை ஆங்கிலக்கல்வி மறுக்கப்பட்டதால் நாம் வஞ்சிக்கப்பட்டோம்" மிகுந்த நுண்ணறிவு படைத்த கிராமத்து இளைஞர்களை உயர் கல்வி இவ்விதம் விரக்தியின் விளிம்புக்குத் தள்ளுகிறது. பட்டதாரிகளான இவர்கள் தம்மால் சிறப்பாகச் செய்யக்கூடிய ஒரே ஒரு தொழில் ஆசிரியர் வேலைதான் என்று எண்ணுகிறார்கள்.

இத்தகைய ஒரு சூழல்தான் சிங்களவர்கள் மத்தியிலும் உள்ளது. இந்தப் பின்னணியில் தான் கார்லோ பொன்சேக போன்றவர்கள் 1960 களில் பொது வாழ்க்கையில் புகுந்த இரு மொழிப் புலமையாளர்களான நுண்ணறிவு மிக்க கிராமத்துப் பையன்கள் குறித்தும் கழிந்து போன "பொற்காலம்" குறித்தும் ஏக்கம் கொள்கின்றனர்.

இரு மொழிகளிலும் புலமைமிக்கவர்களான கல்வி கற்ற இளந்தலை முறையினரின் எண்ணிக்கை வர வரக் குறைந்து செல்வது எமது ஆய்வறிவுத்துறை வறுமையை மேலும் அதிகரிக்கவே செய்யும். ❑

’தமிழ் மொழியைக் கல்வி மொழியாக்கும் போது கல்வித்துறை சார்ந்த விஞ்ஞான கலைத்துறை விஷயங்களையெல்லாம் தமிழுக்குக் கொண்டு வருவது அவசியமாகும். இதன் மூலம் தமிழின் சொல் வளம் பெருகிச் செல்லும் என்பது ஒரு இயல்பான வளர்ச்சி நியதியாகும். சகல அறிவுத்துறைகளையும் தமிழ் மொழியில் கொண்டு வருவதிலே கடைப்பிடிக்கத்தக்க இரண்டு நடைமுறைகளைப் பாரதி வலியுறுத்திக் கூறியுள்ளான். ஒன்று ’பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ் மொழியில் பெயர்த்தல்’, மற்றது ’இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல்’ இவ்விரு வழிமுறைகளாலும் உலகெங்கும் உள்ள கலைச் செல்வங்கள் யாவும் தமிழ் மொழியில் கொண்டுவரப்பட வேண்டும் என்று பாரதி ஆசைப்பட்டான்’

பேரா. எம். ஏ. நுஃமான், பாரதியின் மொழிச் சிந்தனைகள், 1999, பக். 50 — 51

நூலகம்

# பேராசிரியர் சோ. சந்திரசேகரம் மணிவிழா மலர்

தமிழ்க் கல்விச் சூழலில் நன்கு அறியப்பட்ட பலரது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராக விளங்குபவர் பேரா. சோ. சந்திரசேகரம் அவர்கள். இவர் தமிழ் கல்வியியல் துறையில் பல்லாண்டுகளாக ஆசிரியராக் விளங்கி பேராசிரியராக உயர்ந்தவர். அவர் எழுதியுள்ள பல நூல்கள் கல்வியியல் துறையில் தனிச்சிறப்புக்குரியன. தொடர்ந்த அவரது பணிகள் சிந்தனைகள் ஏனைய பேராசிரியப் பெருந்தகைகளில் இருந்து தனித்துவப்படுத்துகிறது.




நூல்:
பேராசிரியர்
சோ. சந்திரசேகரம்
மணிவிழா மலர்

பதிப்பாசிரியர்:
கலாநிதி. எம்.கருணாநிதி

வெளியீடு:
பேரா.சோ.சந்திரசேகரம்
மணிவிழாக்குழு

பக்: 294

சமீபத்தில் பேராசிரியரது மாணவர்களும் நண்பர்களும் சேர்ந்து அவருக்கு மணிவிழாவை வெகு சிறப்பாக நடத்தினார்கள். அப்பொழுது மணிவிழா மலர் ஒன்றையும் வெளியிட்டார்கள். இம்மலர் பேராசிரியரை கௌரவப்படுத்தும் அதே நேரம் புலமைச் சூழலிலும் ஆய்வுச் சூழலிலும் தாக்கம் செலுத்தும் கட்டுரைகளையும் தாங்கி வெளிவந்துள்ளது. பல்வேறு புலமையாளர்கள் - கல்வியியலாளர்கள் கட்டுரைகள் எழுதியுள்ளார்கள். கலாநிதி மா. கருணாநிதியை பதிப்பாசிரியராகக் கொண்டு மலர் (தொகுப்பு) வெளிவந்துள்ளது.

மலர் மூன்று பகுதிகளாக உள்ளது பேராசிரியர் சோ. சந்திரசேகரம் ஒரு பார்வை என்ற முதற் பகுதியில் 4 கட்டுரைகள் உள்ளன. இரண்டாவது பகுதியில் 24 ஆய்வுக் கட்டுரைகள் உள்ளன. இதுபோல் மூன்றாவது பகுதியில் 8 ஆங்கிலக் கட்டுரைகள் உள்ளன. ஆக மொத்தத்தில் மலர் வாசிப்புத் தேடலில் புதிய புதிய தூண்டல்களை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களையும் வாய்ப்புக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளன.

இதில் கல்வியியல் சார் பின்புலத்தில் பல்வேறு கட்டுரைகள் உள்ளன. ஒவ்வொரு கட்டுரையும் பல பிரச்சினைப்பாடுகளையும் புரிய சிந்தனைகளையும், கல்வி முறைமை பற்றிய நோக்குகளையும், வகுப்பறைக் கற்பித்தல் செயன்முறைகள் பற்றியும் பல நிலைகளில் பல்வேறு எண்ணக்கருக்கள் முன் வகைப்பட்டுள்ளன. சமூகம், பொருளியல், அரசியல், தத்துவம், பண்பாடு, வரலாறு சார்ந்த பின்னணிகளில் இருந்து கூட ஆய்வுச் செய்நெறிகள் வெளிப்பட்டுள்ளன.

ஆசிரியர் சமூகம் தொடர்ந்து வாசிப்புத்தேடலிலும் ஆய்வுகளிலும் ஈடுபடுவதற்கு ஏற்ற பார்வைகளையும் விசாலங்களையும் மலர் கொண்டுள்ளமை அதன் சிறப்பு என்றே கூறலாம். தொடருறு ஆசிரியர் கல்விச் செயன்முறைக்கான தர்க்கப் பின்புலமும் வெளிப்பட்டுள்ளது.

ஆக மொத்தத்தில் இந்தத் தொகுப்பு (மலர்) கல்வியியல் துறையில் ஓர் புது வரவு என்றே கூறலாம். கல்வியியல் சிந்தனையின் புத்தாக்கத்துக்கும் விரிவுக்குமான அனைத்துக் கூறுகளையும் தாங்கியுள்ளமை காலத்தின் அவசியமும் கூட

— செ. துரைசிங்கம் —

# வவுனியாவில் அகவிழி செயலமர்வு

வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி பாடசாலைகளின் அதிபர்களுக்கும் தொழில் வழிப்படுத்துனர்களுக்குமான செயலமர்வு ஒன்றை கல்லூரியில் கடந்த 12-03-2005 அன்று நடத்தியது. விழுது நிறுவனத்தின் அனுசரனையுடன் இச் செயலமர்வு நடைபெற்றது.

கட்டுறு பயில்வு பாடசாலைகளின் அதிபர்களுக்கும் தொழில் வழிப்படுத்துனர்களுக்குமான செயலமர்வாக இது திட்டமிடப்பட்டிருந்தது. தமது கடமைக் கூறுகளையும் பொறுப்புகளையும் சிறப்பாக ஆற்றுவதன் மூலம் தங்கள் பாடசாலையில் இணைக்கப்பட்டுள்ள ஆசிரிய பயிலுனர்களை சிறப்பாக வழிநடத்த உதவும் என்ற எதிர்பார்ப்புடன் செயலமர்வு நடைபெற்றது.

கல்லூரியின் உப. பீடாதிபதி கு. சிதம்பரநாதன் அவர்களின் வரவேற்புரையுடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. கல்லூரியின் பீடாதிபதி க. பேர்னார்ட் அவர்கள் செயலமர்வின் நோக்கம் பற்றி தெளிவாகவும் விரிவாகவும் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து வவுனியா வடக்கு வலயம் பணிப்பாளர் சி. தண்டாயுதபாணி மற்றும் வவுனியா தெற்குப் பணிப்பாளர் திருமதி. வீ. ஆர். ஏ. ஒஸ்வெல்ட் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள் செயலமர்வுக்கு அனுசரணையாக அவர்கள் பேச்சு அமைந்திருந்தது. மேலும் அகவிழி ஆசிரியர் தெ. மதுசூதனன் உரை நிகழ்த்தினார். செயலமர்வு பற்றிய மேலதிக தகவல்களை உப பீடாதிபதி த. இன்பதேவராஜாவும் நன்றியுரையை விரிவுரையாளர் க. சுவர்ண ராஜாவும் நிகழ்த்தினார்கள்.

செயலமர்வு குழுச் செயற்பாடாக மாறியது. ஒவ்வொரு குழுச் செயற்பாட்டுக்கும் கல்லூரி விரிவுரையாளர்கள் வளவாளர்களாக இருந்து சிறப்புடன் பணியாற்றினார்கள். ஆசிரியத் தொழிலில் நம்பிக்கையுடனும் தேர்ச்சியுடனும் மகிழ்ச்சியுடனும் பணிபுரிவதற்குரிய சுயத்துவமிகு தொழிண்மையாளர்களாக இருப்பதன் அடிப்படை செயலமர்வுகளின் பிரதானப்பட்டிருந்தது.

இன்று ஆசிரியர்களின் மனப்பாங்கிலும் சிந்தனையிலும் நடத்தையிலும் எத்தகு மாற்றங்கள் வேண்டும், மேலும் அறிவு திறன்கள் சார்ந்து வெளிப்படக்கூடிய புத்தாக்கங்கள் பற்றிய தெளிவையும் ஒழுங்கும் நோக்கத்தையும் செயலமர்வுகள் கொண்டிருந்தன குழுச் செயற்பாட்டின் மூலம் யாவரும் நம்பிக்கையுடன் செயற்படுத்துவதற்கான உளச்சூழல் உருவாக்கப்பட்டது.

பொறுப்புகள் கடமைகள் உரிமைகளை பற்றிய புரிதலும் மகிழ்ச்சிகரமான பாடசாலைச் சூழல் கற்பித்தள் சூழல் எப்போதும் உத்தரவாதப்படுத்தும் வகையில் ஆசிரியர்கள் அதிபர்கள் வகிபங்கு எத்தகையது என்பது பற்றிய தெளிவான புரிதலையும் சிந்தனையையும் ஏற்படுத்துவது தான் செயலமர்வின் முதன்மை நோக்கம்.

இது போன்ற செயலமர்வுகள் இன்னும் வரன்முறையான திட்டமிடலில் மேற்கொள்ள வேண்டுமானால் குறைந்த பட்சம் மூன்று நாட்கள் அமர்வு நடைபெற வேண்டும். வருங்காலங்களில் செயலமர்வு இவ்வாறு திட்டமிட்டால் நன்மைகள் அதிகம்.

எவ்வாறாயினும் பீடாதிபதி உப பீடாதிபதி விரிவுரையாளர்கள் யாவரும் மகிழ்ச்சியுடன் இந்தச் செயலமர்வை நடத்தி முடித்திருந்தார்கள் அந்த வகையில் அவர்கள் யாவரும் பாராட்டுக்குரியவர்கள். ❑

*'கல்விகள் யாவும் மனிதனையே கற்றறிய முற்படுகின்றன. பிரபஞ்சத்தை அறிவதென்பதும் மனிதனை அறிவதாகவே முடிவடைகிறது. அறிவு மனிதனது அகத்தையும் புறத்தையும் அறிந்து கொள்வதிலேயே தனது புலனைச் செலுத்தி வருகிறது. புறவெளிப்பாடுகளோடு ஆரவாரித்து நின்று நோக்குவது மட்டும் தான் உண்மையான அறிவுத்தேடல் என்று கூறிவிட முடியாது. அடிமனத்து ஆழ்ங்களை அகநிலைப்பட்ட தூண்டல்களால் அறிய முற்படுவதும் அறிவுத்தேடல் தான்.'*

— குழந்தை ம. சண்முகலிங்கம் "அரங்கியல்" முன்னுரையில்

உள நெருக்கீடு உளச் சுகாதாரம் உளமருத்துவம் பற்றிச் சிந்திப்பதற்கு சரியான சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது. "ஆசிரியர் கல்வி" "ஆசிரியர் பயிற்சி" இந்த விடயங்களை முழுமையாக உள்வாங்க வேண்டும். உளவியல் கல்வி கீழேத்தேச மரபுகளின் அடிநாதமாக அமைய வேண்டுமென்ற விழிப்புணர்வு முக்கியம்.

கற்றல் கற்பித்தல் அனுபவம் வெறும் பாடத்திட்டப்-பரப்புகளுடன் நின்று விடக்கூடாது. தரமான கல்வி எவ்வளவு முக்கியமோ அதைவிட ஆரோக்கியமான மனித வளம் முக்கியம் ஆகவே அதற்கேற்ப கல்விச் சிந்தனை விரிவு பெற வேண்டும்.

**எஸ். கண்ணதாசன்**

வடமராட்சி

❑ ❑ ❑

அகவிழி பெப்ரவரி, மார்ச் இதழ்கள் சுனாமிக்கு பின்னர் நாம் கவனிக்க வேண்டிய சிந்திக்க வேண்டிய விடயங்களை தெளிவுபடுத்தும் நோக்கில் வெளிவந்தமை பாராட்டுக்குரியது. ஆனாலும் சுனாமிக்கு பின் ஏற்படக்கூடிய பல்துறைசார் பிரச்சினைகளை கல்வியியல் நோக்கில் ஆராயத்தக்க கட்டுரைகளின் போதாமையை இந்த இடத்தில் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை மீள் புனரமைப்புச் செய்யும் பொழுது நாம் கவனிக்க வேண்டிய விடயங்கள் குறித்து சிந்திப்பது அடிப்படையானது.

ஆகவே அந்த வகையிலான கட்டுரைகளையும் நாம் சேர்த்துக் கொள்வது பொருத்தமாக இருக்கும். குறிப்பாக பாடசாலைகள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்ட பாடசாலைகளை மீள் கட்டமைப்புச் செய்யும் போது பாடசாலைக் கட்டடக் கட்டமைப்புப் பற்றி பிரத்தியேகமாகச் சிந்தித்து செயலாற்றுவது முக்கியம்.

**ச. முகுந்தன்**

வவுனியா தெற்கு வலயம்.

❑ ❑ ❑

இயற்கை அனர்த்தத்தின் பின்னரான சூழற் கல்வித்திட்டமிடல் என்ற கட்டுரை ஓர் ஆரம்ப முயற்சி - ஆனால் இந்தத்துறை பற்றி விரிவாக கல்வியியல் துறைசார் பரப்புகளுடன் கூடிய நீண்டகாலத் திட்டமிடல் அவசியமாகிறது. ஆசிரியர்களுக்கு தெளிவான அறிவும் புரிதலும் வேண்டும். ஆகவே வலய ரீதியில் ஆசிரியர்களுக்கு "இயற்கை" சூழலியல் பற்றிய கற்கையை வளர்க்கும் விதத்தில் கருத்தரங்குகள் உடனடியாக செய்யப்பட வேண்டும். ஆசிரியர்கள் சமூக அக்கறையுள்ளவர்களாக மாற்றப்பட வேண்டும்.

**க. கமலநாதன்**

ஆசிரிய மாணவர்

யாழ்ப்பாணம்.

❑ ❑ ❑

சுனாமி அனர்த்தத்தால் பாடசாலைகள் அதிகமாகவே பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றை புனரமைக்க நோர்வே நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளதாக செய்திகள் உள்ளன. வடக்கு கிழக்கு மாகாணத்தின் 65 பாடசாலைகளையும் தென்பகுதியில் 15 பாடசாலைகளையும் புனரமைக்க அகதிகளுக்கான நோர்வே நிறுவனம் முன் வந்துள்ளது.

திருகோணமலையில் 17, மட்டக்களப்பில் 16, அம்பாறையில் 20, முல்லைத்தீவில் 9, யாழ்ப்பாணத்தில் 3 இவ்வாறு பாடசாலைகள் இ.னங்காணப்பட்டுள்ளன. போர்க்காலங்களில் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் பல இன்னும் முழுமையாக புனரமைக்கப்படவில்லை. இந்நிலையில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் உரிய காலத்தில் புனரமைக்கப்படுமா? என்ற கேள்வி எழாமல் இல்லை.

இருப்பினும் பாடசாலை புனரமைப்பு குறித்து உள்ளூர்மயப்பட்ட ரீதியில் இருந்து சிந்திக்க வேண்டியுள்ளது. பாடசாலைகளின் கட்டிட நிர்மாணங்கள் தொடர்பாக அதிகம் சிந்திக்க வேண்டும். அதாவது கட்டிடக்கலையின் தனித்தன்மைகள் எப்படி இருக்கும் என்பது குறித்து ஆலோசிப்பது நல்லது. கற்கும் இடம் கற்பதற்கான சூழலை உருவாக்கும் திறன் கொண்டதாக, மகிழ்ச்சியுடன் கற்பதற்கான அழகியல் அம்சங்கள் நிரம்பப் பெற்றதாக இருக்க வேண்டும்.

பாடசாலை புனரமைப்பு அமைவிடம் பற்றிய ஆரோக்கியமான பார்வைகள் எம்மிடம் கொண்டுவரப்பட வேண்டும். பாடசாலை மகிழ்ச்சிக்குரிய ஆளுமைத்திறன்களை இனங்காண்பதற்குரிய இடம் சார்ந்த புரிதல் வளர்க்கப்பட வேண்டும்.

இன்றைய ஆலோசனைகளில் கலந்துரையாடல்களில் பாடசாலைப் புனரமைப்பில் கவனிக்கப்பட வேண்டிய அழகியல் அம்சங்கள் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

**பூ. வடிவேற்கரசன்**

ஆசிரியர் — காரைதீவு.

அகவிழி

**AHAVILI**
*49/1, Medawelikada Road, Rajagiriya.*
*Tel : 011-2869257*
*E-mail : ahaviliguru@yahoo.co.uk*

## சந்தா விண்ணப்பப் படிவம்

பெயர் (முழுப்பெயர்) : ....................................

கற்பிக்கும் பாடசாலை : ....................................

பாடசாலை முகவரி : ....................................

....................................

....................................

கற்பிக்கும் பிரிவு : ஆரம்பம் / இடைநிலை / உயர்தரம்

அகவிழி அனுப்ப வேண்டிய முகவரி

....................................

....................................

....................................

இத்துடன் ரூபா [ ] க்கான காசோலை / காசுக்கட்டளையை

இல. [ ] இணைத்துள்ளேன்.

.................................... ....................................

கையொப்பம் திகதி

**அகவிழி சந்தா விபரம்**

| தனிப் பிரதி | 6 மாத சந்தா | 1 வருட சந்தா |
|---|---|---|
| ரூபா 25.00 | ரூபா 150.00 | ரூபா 300.00 |

காசோலை / காசுக் கட்டளை மூலம் பணம் செலுத்துபவர்கள் **AHAVILI** எனப் பெயரிட்டு அனுப்புக.

அகவிழி

**AHAVILI**
*49/1, Medawelikada Road, Rajagiriya*
*Tel : 011-2869257*
*E-mail : ahaviliguru@yahoo.co.uk*

## சந்தா விண்ணப்பப் படிவம்

பெயர் (முழுப்பெயர்) : ....................................

கற்பிக்கும் பாடசாலை : ....................................

பாடசாலை முகவரி : ....................................

....................................

....................................

கற்பிக்கும் பிரிவு : ஆரம்பம் / இடைநிலை / உயர்தரம்

அகவிழி அனுப்ப வேண்டிய முகவரி

....................................

....................................

....................................

இத்துடன் ரூபா [ ] க்கான காசோலை / காசுக்கட்டளையை

இல. [ ] இணைத்துள்ளேன்.

.................................... ....................................

கையொப்பம் திகதி

**அகவிழி சந்தா விபரம்**

| தனிப் பிரதி | 6 மாத சந்தா | 1 வருட சந்தா |
|---|---|---|
| ரூபா 25.00 | ரூபா 150.00 | ரூபா 300.00 |

காசோலை / காசுக் கட்டளை மூலம் பணம் செலுத்துபவர்கள் **AHAVILI** எனப் பெயரிட்டு அனுப்புக.